
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணு ஒன்று





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| மாலை 3 | ஈரோடு, பிரபவ-ஸு ஆடிமீ 2 உ (17—7—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 12 |
|---|---|---|



# மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- **T. N.** சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசிம் & கம்பெனி, கிள்ளாங், பினங், சிங்கப்பூர்.

## $ 500 இனும்! $ 500 இனும்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (றிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.




இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்த லேகியம் அதிவிலையுயர்ந்த பொருள்களாகிய அபரேக், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு, இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்ப வகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது.

இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகவிருந்தும், இதை தனவந்தர் முதற்கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், அரிய சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் முதலிய வகைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி சித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒரு முறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாக்ஷியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள்வேத வைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாக்ஷி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோன் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும். வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
ரு. லாஸரஸ் பண்டிதன்
ஸ்ரீமத் T. R. மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக் கூடிய லேகியம் $ 3-75.

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:— இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது.


### மதுரை செங்குந்த மகாஜன சங்கம்.

நாளது ஆனி-மீ 13-உ திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு சங்கமண்டபத்தில் திரு. எஸ். சாலை முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. கூட்டத்திற்கு குலப் பெரியார்கள் பலரும் வந்திருந்தனர். திருவாளர் நாகப்ப முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் மிக அருமையாகப் பாடப்பெற்று முடிந்ததும விஷய சூசிகையிற் கண்டவாறு இவ்வருடத்திற்கு சங்க உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. கீழ்கண்ட கனவான்கள் சபையினரால் கீழ் வரும் உத்தியோகங்கட்கு ஏகமனதாக நியமிக்கப்பட்டார்கள் எஸ். சாலை முதலியார் தலைவராகவும், திரு. பி. வி. முத்துக்கருப்ப முதலியார் அவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீமான் சி. ந. முத்துக்கருப்ப முதலியார் பொக்கிஷதாரகவும் நியமிக்கப்பட்டனர். காரியதரிசிக்கு உதவியாக நன்கு இடையறாது உழைக்கும் இளைஞருப் நியமிக்கப்பட்டனர். இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

### கிருஹப் பிரவேசம்.

எளைச்சிபாளையம் 30-6-27 தேதி எனது வீடு பார்ப்பனீய புரோகிதமற்றகிருஹப் பிரவேசம் காலை 11 மணிக்கு ஆரம்பஞ்செய்து பந்துமித்திர ஜனங்களுடன் சு. தங்கமுத்து செட்டியாரால் முறைப்படி நடத்தப்பட்டது. பஜனையுடன் தாம்பூல போஜனம் வழங்கப்பட்டன. சுமார் 150 ஜனங்களாலும் ஆமோதிக்கப்பெற்றது என்று டி. சென்றாய செட்டியார் எழுதுகிறார்.


### கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்றொன்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

# பிராமணனை குற்றம் சொல்லுவது ஏன்?

## பிராமணத்தன்மையினின்று நீங்கினதினால் மட்டுமன்று

முன் தொடர்ச்சி;

---

(கைவல்சாமியார் எழுதியது.)

தஞ்சாவூர் துவார் என்ற கிராமத்தில் நடந்த பிராமண மகாநாட்டுத்தீர்மானத்தின் அக்கிரமமான ஆணவத்தை ராஜீபக்கொள்கை மதச்சீர்திருத்தக்கொள்கையுடைய பிராமணரல்லாத எல்லாப் பேபர்களும் கண்டித்தெழுதியிருக்கின்றன. அதிகாரவர்க்க சம்பந்தமுடைய பார்ப்பனர்களும், தேசியவாதிகளென நடிக்கும் பார்ப்பனர்களும், தங்கள் உயர்வும் சுயநலமும் என்றும் நிலைத்திருக்கப் பழைய வழியாகிய இதுவே தக்க மார்க்கமென்று இதை வெளிக்குக்காண்பிக்காமல் உள்ளே சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் அநேக பார்ப்பனர்களும், இதில் நேரில் சம்மந்தப்படாவிட்டாலும் மனதில் இதற்கு உடைந்தையாகவிருக்கிறார்கள் என்பதற்கு பிராமணரல்லாதார்களின் பணத்தால் பிழைத்து அவர்களையே கீழாக்கும் சுதேசமித்திரன்முதலிய பார்ப்பாரப்பத்திரிகைகள் இதைப்பற்றிக் கண்டிக்காமலிருப்பதே சாட்சியாகும் என்று முன்னமே எழுதியிருக்கிறோம். 'தனக்குச் சுடும்போள் தட்டி தாளக்க' என்பது மலையாளத்து பழஞ்சொல், தாயின்கால் சுடும்பொழுது குழந்தையாயிருந்தாலும் கீழே வந்துவிடுமாம். 'எற்றுமுட்டியால் சேரையும் கடிக்'குமென்பதும் மலையாளத்துப் பழஞ்சொல்லே, அதிகத்தொந்திரவு கொடுத்தால் கடிக்காத சாரைப்பாம்பும் கடிக்குமாம் அதுபோல் பிராமணரல்லாத சமுகங்களுக்கு பிராமணன் உண்டுபண்ணும் இடைஞ்சலானது விருத்தியாகிக்கொண்டேவருகிறது. இதை உணர்ந்து பிராமணரல்லாதார் உதவி புரியாவிட்டாலும் பார்ப்பனிடம் சேர்ந்து அற்ப வாழ்கைக்கு அடிமைப்பட்டு தம்ரெத்தத்தையே ஒழுக்கிக்கொள்ளாமலிருக்கும்படியாய் கேட்டுக் கொள்ளப்பகிறார்கள்.

நான் எழுதிவந்த வியாசங்களில் முட்டாள்தன மூடக்கொள்கைகளின் பாசத்தால் கட்டுப்பட்டு இருப்பவையும், உள்ளே ரம்பப்பொடியை நிறைத்து வெளியே பொன்முலாம்பூசின பேச்சால் சண்டை சச்சரவுகளையும் மாச்சரியங்களையும் ஜன சமூகங்களுக்குள் வந்து புகுத்தியிருக்கும் பாப்பார ஆரியமதக்கோட்பாடுகளையும், அவர்கள் ஸ்மிருதிகளில் எழுதியிருக்கும் மனிதத்தன்மையில்லாத அனுச்சார விதிகளையும், மூடராஜாக்களைச் சிற்றின்பப் பிரியர்களாகச்செய்து அவர்கள் உதவியால் தங்கள் கொள்கைகளைப் பரப்பினகதைகளையும், அவர்கள் பழக்கவழக்கங்களில் மதம் கெட்டாலும்சாமிதொலைந்தாலும் சமூகம் பாழாயினாலும்ராஜியம் நாசமடைந்தாலும் தன் வயிறு நிறைந்தால் போதுமென்று இவர்கள் செய்யும் தொழிலின் தன்மைகளைபற்றியும் விரிவாக எழுதவில்லை. ஏனெனில் ஆரியவழக்குப் பழக்கங்கள் தமிழ் நாட்டில் பரவிவிட்டமையாலும், உத்தமர்களான ரிஷிகள் நடுநிலைமையாகச்சொன்ன நீதிகளை உத்தேசித்தும், தேர்ந்திமறையும் சர்யையால் கற்பிக்கப்பட்ட இவ்வுலகத்தில் ஒரே சத்துப்பொருளாயுள்ளவரை அடைவதற்கு எல்லா உத்தமரின் ஒழுககங்களும் ஒன்றென்பதே எல்லாமதத்திலுமுள்ள தத்துவமென்பதை உணர்ந்தும் ஆரியர்களென்றும் மற்றவர்களென்றும் வித்தியாசப்படுத்தி எழுதாமல் சம்மதக்கொள்கைகளின் அனுச்சாரங்களை நாமே எடுத்துக்காண்பித்தால், இனியும் அன்னியர்கட்கும் நம்மிடத்தில் அசங்கியம்தோன்றுமென்று நினைத்து எழுதாமலிருந்தோம். நாங்கள்தான் பிராமணர்கள் மற்றவர்களெல்லாம் ஒழுக்கம் ஆசாரம் சுத்தி என்பவை ஒன்றுமில்லாத வேசிமகன் ஊழியன் என்னும் அர்த்தத்தோடு கூடின சூத்திரன் என்று சொல்வதினால் அதற்குச்சரியான சமாதானத்தை கூறாமலிருக்கமுடியுமா. கடுமையான வார்த்தையால் கண்டிக்கிறது 'குடியரசு' "டூமச்" என்று சிலர் சொல்லுகிறார்கள். நியாயத்தைக் கவனித்துப் பார்க்காமலும் விசாரணையில் சிறிதுகூட மனம் செல்லாமலும் என் எழுதுகிறது எதற்காகச் சொல்லுகிறதுஎன்பதில் புத்தியைச் செலுத்தாமல் பேசுகிறவர்களின் மனம் புத்தி உணர்ச்சியில்லாத தன்மையைப்பற்றி குடியரசுக்குக் கவலையில்லை. படித்துவிவகாரந்தெரிந்து பலருக்குஉபதேசித்துபல சீர்திருத்தத்திற்கு உடன்பட்டு பாரபட்சத்தால்ப் பலரைத்துன்புறுத்துவதையுணர்ந்தும் பயப்படாத தீரன் என்பதாகப்பலருக்கு அபிநயித்தும் பல பிரசங்கமேடைகளில் பிரசங்கம் செய்தும் பார்ப்பான் பழிக்குப்பயந்து நான் ராஜ்ஜியவாதிஎன்று பறக்கும் பிராமணரல்லாத கோழைகளை காண்பதுதான் ஆச்சரிப்படக்கூடியதாக இருக்கிறது. "குடியரசு"சொல்லுவதில்கான் திரத்தப்பு என்ன? உலகநடை அனுபவத்திலில்லாததுயென்ன ? யுக்திக்கு பொருந்தாதது எது? என்கிறதையாவது எடுத்துக்காண்பியுங்கள். காப்பித்தோட்டத்தில் வெள்ளைக்காரர்கள் இந்துவைக்கூலியென்றாலும் இந்துஜன சமூகத்தில் இந்துக்களைக் கூலிகளென்று சொன்னதில்லை. இந்துக்களை மூலைமுடுக்குகளில் அஞ்ஞானிகளென்று கிருஸ்தவர்கள் சொன்னாலும் ஜன சமூகத்தைப்பார்த்தோ அவர்கள் சங்கத்திலோ இந்து சமூகத்தை அஞ்ஞானிகளென்று சொன்னதில்லை. கடவுளை நம்பாதவன் காபிரே ஒழிய இந்துசமூகமே "காபிர்" என்று மகமதியரும் சொன்னதில்லை. நம் சோற்றையே தின்றுநம்மாலேயே வளர்க்கப்பட்டு நம்மிடத்தில் வாங்கின யாசகபணத்தாலும் புரட்டான வைதிகக்கர்மங்களின் வரும்படியாலும் போஷிக்கப்பட்டு இழிந்த தொழிலைச் செய்து இழிந்த தந்திரத்தால் முன்னுக்கு வந்த பார்ப்பனர்கள் தங்களைத்தவிர மற்றெல்லாரையும் சூத்திரர்கள் என்று சொல்லுகிறார்கள். மற்றவர்களைசூத்திரன் என்று சொல்லுவதற்கு இவன் யார்? நான்கு வருணத்தில் க்ஷத்திரியன் வைசியன் இல்லையென்று சொல்லுவதற்கு இவர்களுக்கு எந்த நியாயம் இடங்கொடுத்தது. சாஸ்திரமா? உலக அனுபோகமா? யுக்தியா? இந்த இடத்தில் சாஸ்திரயுக்தமாக பிராமண ஜாதியில் பிறப்பைப்பற்றி எழுதினால் படிக்கும் வாசகர்களுக்குஅசங்கியம்தோன்றும். துவார் சங்கத்துப் பார்ப்பனர்களையும் அதைக்கண்டுமகிழ்ந்திருக்கும்பார்ப்பனர்களையும், 'இந்து" சாஸ்திரப்பிரகாரம் பிராமணரல்லவென்பதை முதலில் சொல்லிவிட்டு க்ஷத்திரியனும் வைசியனும் உண்டாயில்லையா என்பதைப்பற்றியும் பாப்பான் ஏன் இல்லையென்றான் என்பதைப்பற்றியும் பின்னால் எழுதுகிறேன்.

சபைத்தலைவர் "மிலேச்ச பாஷையைப்படித்து," "மிலேச்சபாஷைக்கு" உபாத்தியாயராய் இருக்கிறார். இவர் பிராமணத்தன்மையிலிருந்து நீங்கினவரென்பதற்கு இது ஒன்றேபோதும். சாஸ்திரயுக்தமாகத் தள்ளப்படவேண்டும். உபசாணைத்தலைவரோ மிலேச்ச பாஷையைப்படித்து சேவகாவிர்த்திசெய்தவர். சேவைக்கு எங்கி எத்தனை பொட்லர்களை வணங்கித் திரிந்தார் என்பதும் வெளிப்படை. இவர் வாழ்க்கை பிராமண தர்மத்திற்கு நேர் விரோதமென்பதுசாஸ்திரத்திற்கு நிச்சயம்.

வருணாஸ்ரதர்மத்தில் ஆஸ்ரமத்தில் முதல்படியானபிரம்மசரியத்தை எவன் அனுஷடித்து வந்திருக்கிறானோ அவனே பிராமண தர்யத்திற்கு பாத்யதை உடையவனென்பது "இந்து" சாஸ்திரத்தின் சித்தாந்தம். உலகங்களுக்கு இதஞ்செய்கிறவனை பகவான் பிர்மதேவரால் பிராமணதர்மங்களை நன்றாகக்காக்கவேண்டி முதலிலேயே ஆஸ்ரமங்கள் நான்காக உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள் குருகுலத்தில் வாஸஞ்செய்வதே பிர்மச்சரியம் என்னும் முதல் ஆச்ரமம் அந்த ஆச்ரமத்தில் நல்லதான சௌசம் சம்ஸ்காரம், ஹோமம், விரதம் இவைகளில் நன்றாக அடக்கிய மனமுள்ளவனும் இரண்டு சந்தியாகாலங்களிலும் சூரியனையும அக்கினியையும் மற்ற தேவர்களையும் துதிசெய்து தூக்கத்தையும் சோம்பலைவும் விலக்கிவிட்டு குருவை வணங்குவதாலும், வேதாப்பியாசம் செய்வதாலும், வேதாந்த விசாரம் செய்வதாலும் பரிசுத்தமாகச் செய்யப்பட்ட அந்தராத்மாவையுடையவனும், மூன்று காலங்களிலும் ஸ்நானஞ்செய்வது, பிர்மச்சரியம், அக்கினி ஆராதித்தல், ஆச்சாரியருக்குப் பணிவிடை, நித்தியம் பிச்சையெடுப்பது, அதை உண்பது, முதலிய எல்லா நேமங்களையும் அந்தராத்மாவிடம் அர்ப்பணம் செய்தவனும்குருவின் வாக்கியத்தை சொன்னபடி செய்வதில் வேறு கருத்தில்லாதவனும், ஆச்சாரியருடைய அனுக்கிரகத்தால் கிடைத்த வேதத்தை பிரிதாகக்கொண்டவனுமாய் எவன இருந்து பிர்மச்சரிய விரதத்தை முடிக்கிறானோ அவனே பிராமண தர்மத்தின் முதற்படிக்கு பாத்யதையுடையவனாவான். பிர்மச்சரிய ஆசிரமத்தை அடைந்து பூர்ணம் பண்ணாதவன்பிராமணனென்றாவது, பிராமண தர்மமென்றாவது, சொல்லிக்கொள்ள யாதொரு பாத்யதையும் இல்லாதவன் என்பதை "இந்து" மதத்தின் வேறுபாடுடைய எல்லா "இந்து" சாஸ்திரங்களிலும் வற்புறுத்தி சொல்லியிருக்கிறது. பிராமணன் என்று சொல்லிக்கொண்டு துவாரில் கூடிய பார்ப்பானிலும், அதை ஒத்துக்கொண்டிருக்கும் பார்ப்பானிலும் எவனாவது ஒருவன் பிர்மச்சாரியத்தை அனுஷ்டித்தவனுண்டா? எப்பொழுது இல்லையோ அப்பொழுதே இவர்களை பிராமணர்கள் அல்லவென்று சொல்வதற்கு என்ன ஆக்ஷேபனை? அப்படியிருக்க நான் பிராமணனென்று சொல்லிக்கொள்வதற்கு இவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? சாஸ்திர உரிமையா? உலக உரிமைய ? சாஸ்திர உரிமையானால் பிராமண தர்மத்தினின்று விலகி தொழில் செய்யும் பிராமணன் சண்டாளத்தன்மை அடைகிறானென்று எந்த "இந்து" சாஸ்த்திரத்தை பிராம்மணனென்பதற்கு பிரமாணமாகக் காண்பிக்கிறானோ அந்தசாஸ்திரத்திலேயேசொல்லப்பட்டிருக்கிறது. இதிகாசப் புராணங்கள் பிராமணனுக்குப் பிரமாணமானால் அதைவிட்டு வேறுபடுகிறவன் பிராமணத் தன்மையினின்று நீங்கினவனாகிறான் என்று சொலலப்படுகிறது. எவ்வளவோ வருஷங்களாக ஜன சமூகங்களை இரட்விடாத கொடூரத்தினால் ஜீவகாருண்யம் சிறிதுமில்லாமல், கடவுள் பெயராலும், மதச் சடங்காலும், முட்டாள்களான ராஜாக்களின் அதிகாரத்தின் மூலமாகவும் ஜன சமூகங்களை வைதீகக் கொடுமையால் தாழ்த்தி வைத்த இவர்கள் இனியும் அடிமையாக்கிவைக்க மற்றவர்கள் எல்லோரும் சூத்திரர்கள் என்று சொல்ல எந்த ஞாயம் உரிமை யளித்தது? தமிழ் நாட்டாரின ஆராய்ச்சியில்லாத புத்தியும் அடிமைக்குணமுமே உரிமை அளித்தது என்று சொல்வது மிகையாகாது. ஒரு பக்கம் காங்கிரஸ் பெயரைக்காட்டி பெரிய பெரிய உத்தியோகத்தை வகித்துக்கொள்ளுகிறான். மற்றொருபக்கம் வகுப்புத்துவேஷிகள் என்று சுயராஜ்யக்கக்ஷியின் பெயரைச் சொல்லி பாக்கியிருக்கும்உத்தியோகத்தையும் பெற்று மற்றவர் முன்னணிக்கு

[14ம் பக்கம் பார்க்க]

## நமது கடமை யாது?

### வாலிபர்களே! முன்வாருங்கள்.

(சிதம்பரனர் எழுதுகிறர்.)

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! நாம் சில மாதங்களாகக் கோவை விசேஷ மகாநாட்டை எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். அதுவும் எதோ ஒருவாறு சந்தோஷப்படத் தக்கவாறு நடந்தேறியது பற்றி மகிழ்ச்சியடையவேண்டியது தான். ஆனல் அம் மகாநாட்டின் தீர்மானங்களிலிருந்து அரசியற் கிளர்ச்சிகள் அதிகப்படுமேயன்றி அங்கே சமூகக்கிளர்ச்சியும், மதக்கிளர்ச்சியும் குறைந்து விடுகின்றனவோ வென்று வாலிபர் பலர் அஞ்சுகின்றார்கள். அவர்களைத் தட்டிக்கொடுத்துச் சமூகத்தொண்டிலும், மதத்தொண்டிலும் ஈடுபடுத்த வேண்டுவது வைக்கம் வீரரின் கடமையாகும், வைக்கம் வீரரும், சுரேந்திரநாத் ஆரியாவுந்தான் வாலிபர்களுக்குச் சரியான வழியைக் காட்டக் கூடியவர்கள் என்பது வாலிபர் பலரின் அபிப்பிராயமாகும். நாம் ஆரியர்களின் வஞ்சகத்தினாக்குள்! இன்னும் அகப்பட்டுவிழித்துக்கொண்டிருக்கின்றோம். அதினை விடு பட்டாலொழிய நாம் இவ்வுலகில் மனிதர்களாக உலவமுடியாது. இன்னும் அநேக சங்கிலிகளால் கட்டுண்டுகிடக்கின்றோம். அவற்றை நீக்கிக்கொண்டாலன்றி நாம் சுதந்தர உணர்ச்சி பெறமாட்டோம். நாம் இன்னும் இயற்கைக்கு மாறுபட்டபோலி ஆரியக்கதைகளை நம்பிக்கொண்டிருக்கின்றோம். யாருக்கும் அஞ்சாத வீரர்களின் வழியில் வந்த நாம்—சுயமரியாதையே, உருவாக விருந்தவர்களின் குடியிற் பிறந்த நாம்—மானமே உயிராகக் கொண்டவர்களின் குலத்திற்பிறந்த நாம், இன்று நம்மைப்போலொத்த மனிதர்களுக்கு அடிமைப் பட்டுக்கிடக்கின்றோம். அவர்களைக் கடவுளின் முகத்திலிருந்து பிறந்தவர்களாகக் கருதுகின்றோம். வைக்கம் வீரர் கூறுவது போல காய்ந்த தருப்பைப் பில்லுக்கும், கிழிந்த பஞ்சாங்கத்திற்கும் அஞ்சிநடுநடுங்கிப்பணிகின்றோம் இந்த நிலையில் நாம் ஆங்கிலேயர்களை விரட்டவேண்டுமென்றும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் வேற்றுமை கூடாதென்றும் கூறுகின்றோம். நம்மக்கள் ஒவ்வொருவரும் சுயமரியாதை யுடையவர்களாக விளங்கவேண்டும் அதற்குரிய வேலையைத்தான் முதல் முதல் செய்யவேண்டும் காங்கிரசிலிருந்து சுயமரியாதைக்கோ அல்லது சுயராஜ்யத்திற்கோ பாடுபடுபவர் படட்டும் அவரை நாம் தடை செய்யவேண்டாம். ஆனல் நாம் மட்டிலும் நமது சுயமரியாதைப் போராட்டத்தை விடாமல் நடத்திச்செல்வோம். நமக்கு வைக்கம் வீரரும், ஆரியாவும் தலைவரிருந்தால் போதுமானதாகும்.

நம்மில் அநேகர் கோவை மகாநாட்டின் முடிவைக்கண்டு அஞ்சுகின்றார்கள். ஆனல் அவர்கள் அஞ்சவேண்டியதற்குச் சிறிதும் காரணமில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர் முழுதும் ஒற்றுமையாக விருந்து நமது சுயமரியாதைப் போராட்டத்தை எதிர்த்தாலும் அதனைத் தோற்கடிக்க முடியாது. சுயமரியாதை என்பது ஒவ்வொரு மனத்திலும் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது இனி அதனை அசைப்பதற்கு சீனிவாசய்யங்காராலும் முடியாது. ரங்கசாமி ஐயங்காராலும் முடியாது யாராலும் முடியாது. ஆதலால் ஒவ்வொரு தொண்டர்களும், அஞ்சா நெஞ்சுடனும். தன்னம்பிக்கையுடனும் சுயமரியாதைப் போராட்டத்தை நடத்துவோமாக. பார்ப்பனீயத்திரையை—வஞ்சகத்திரையை—மக்களை அடிமையில் வைத்திருக்கும் பூதத்தை இன்றே ஒழிப்பதற்குப் புறப்படுவோமாக. வாலிபர்களே! அஞ்சாது முன் வாருங்கள்!.

---

## போனூர் தாலுகா சந்தவாசல் பிராஞ்சு போஸ்டாபீஸ்.

அதிக நாளாய் தபால் சேவகன் வேலையையும் போஸ்டுமாஸ்டர் வேலையையும் ஓர் பூசாரி பார்த்து வந்தார். வேலை அதிகமென்றும் தற்காலம் ஓர் தபாற் சேவகனை நியமித்ததின் நிமித்தம் பி. போ. மாஸ்டர் ரூ. 9 சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்ததை ரூ 6-க்கு பார்க்க முடியுமா, வேறுயாராவது பார்ப்பதற்கு தயாரிலிருக்கிறர்களா வென்று தபாலிலாகா சூப்பிரின்ட் ஆனவர்கள் ரிவினியூ இனிஸ்பெக்டரை தண்டோரா மூலமாய் பிரசித்தப்படுத்தும்படி உத்தரவளிக்க அதைக்கண்ட சிலர் ரூ. 6க்கு வேலை பார்க்க சம்மத மென்று மனு போட்டுக்கொண்டார்கள். பார்ப்பனனான தபாலிலாகா இனிஸ்பெக்டர் சில தினங்களுக்கு முன் தணிக்கைக்கு வரும் காலத்தில் பார்ப்பனன் பார்ப்பனனுக்கு உதவுதல் வேண்டுமென்று பி. போ. மாஸ்டரும் தானும் கலந்து கொண்டு கேட்பவர்களுக்கு இனிஸ்பெக்டர் அப்படிச் செய்ய உத்தேசமில்லை. டிபார்ட்மென்ட் போஸ்டாபிஸாக்க உத்தேசமென்று மெழுதிவிட்டார் 2—7—27ல் பார்ப்பனரல்லாத இருவர் தபால் இலாகா இனிஸ்பெக்டரவர்களை நேரில் கண்டு வினவினதற்கு மேற்கண்டபடியே பதில் சொல்லிவிட்டார். அவர்கள் வேறுவிதமாக பார்ப்பனர் சூழ்ச்சியை தெரிந்து கொள்ளக்கருதி அதற்குத்தகுந்த இடங்களில் விசாரிக்க அவ்வாறில்லை. குறைப்பது நிச்சயம் மேலதிகாரிகள் கரஸ்பாண்டன்ஸிலிருக்கிற தென்று தகவல் தெரிந்து கொண்டார்கள். தபால் இலாகா இன்ஸ்பெக்டரான பார்ப்பனன் சொன்ன பொய்யான வார்த்தைகள் பார்ப்பனர்களுக்கு பார்ப்பனரலலாதார் பேரிலுள்ள அன்பை விளக்கி காட்டுகிறதென்றும் உத்தியோக முறைமையிலும் சூதாகவே இருக்கிறர்களென்பதும் இத்தகைய பார்ப்பனக் குறும்புகளும் அயோக்கியத்தனங்களும மறையும் காலம் என்றுதான் வருமோ வென்றும் ஒரு நிருபர் எழுதுகிறர்.

---

## முக்கிய கவனிப்பு.

சந்தா நேயர்கள் பணமனுப்பும் போதும்; விலாச மாற்றத்தைத் தெரிவிக்கும்போதும் தங்கள சந்தா நெம்பரையும் தெரிவிக்கக் கோருகிறோம். மானேஜர்.

## கோவைமகாநாட்டுத் தீர்மானங்கள்

(முன்தொடர்ச்சி)

13. ஜனங்களின் சிக்கன முறையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டுக் குடியை முற்றும் ஒழிக்க தேசம் வேலைசெய்ய வேண்டுமென்று இம் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

14. நாட்டுப் புறங்களை எற்றனவேவுள்ள படி செய்வதற்காக கூட்டுறவு சங்க இயக்கத்தில் பார்ப்பனரல்லாத சங்கமுமதலைவர்களும் மிக்க கவனம் எடுத்துக்கொண்டு கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று இம்மகாநாடு கருதுகிறது.

15. ஜனங்களின் சங்க முறையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டுக் குடியை முற்றும் ஒழிக்க தேசம் வேலை செய்யவேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

16. செட்டில்மென்டு கொள்கைகள் உள்ள செட்டில்மெண்டு மசோதாவொன்று சட்டசபையில் கொண்டுவரவேண்டுமென்று இம்மகாநாடு கருதுகிறது. ஆனல் அண்மையில் வெளியிடப்பட்ட நகல் மசோதாவில் கண்டுள்ள விஷயங்கள் சரியானதாக இல்லாமையால் அதை ஆதரிக்க முடியாமலிருப்பதற்காக வருந்துவதாகவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

17 தமிழ்ப்போதகாசிரியராய் இருப்பதற்கு வித்வான் பரீக்ஷையில் தேரியிருக்கவேண்டும் என்று இப்போது நூதனமாக வித்யா இலாகாவிலிருந்து பிறப்பித்திருக்கும் உத்தரவு, பல்லாண்டுகளாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயின்று புலமையடைந்த பண்டிதர்களைத் தாழ்த்துவதற்கும் ஒதுக்குவதற்கும் காரணமாக ஏற்படுவதால் அத்தகைய கட்டுப்பாட்டை துரைத்தனத்தார் ரத்து செய்யவேண்டும் என்று இம மகா நாடு தீர்மானிக்கின்றது

### உத்தியோகங்கள்.

18 இப்பொழுது உத்தியோகங்கள் ஒரே ஜாதியாரின் கையில் அகப்பட்டிருப்பது இராஜ்யத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் கெடுதல் ஏற்பட்டிருப்பதனல் தேசத்தின் அபிவிர்த்தியை முன்னிட்டு வருகிற 5-வருடம் வரையில் உத்தியோகங்களுக்கு ஆட்களை நியமிக்கையில் பார்ப்பனர்களை தவிர்த்துப் பார்ப்பனரல்லாதாரையே நியமிக்க வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

### பார்ப்பனவக்கீல்கள்.

19 நமது சமூக முற்போக்குக்குபார்ப்பன வக்கீல் தத்துவமே பெருத்த இடையூறாய் இருப்பதால் நமது மக்கள் கூடுமானவரை விவகாரங்களை தங்களுக்குள்ளாக பைசல் செய்துகொள்ளவேண்டும். முடியாமல் விவகாரத்திற்குப்போக நேரிட்டு விட்டால் பார்ப்பனரல்லாத வக்கீல்களைக் கொண்டே நடத்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறது.

---

# கோவை மகாநாடு.

(சென்றவார தொடர்ச்சி.)

காங்கிரசில் சேர இஷ்டமுள்ளவர்களுக்கு அனுமதிகொடுக்கும் தீர்மானம் நிறைவேறியதும் ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார் வரதராஜுலு நாயுடு கல்யாணசுந்தர முதலியார் ஆகியவர்கள் பேசும்போது ஜனங்கள் வெகு ஜாக்கிரதையாக கவனித்துக் கேட்டார்கள். ஸ்ரீமான் செட்டியார் தானும ஸ்ரீமான் வரதராஜுலுவும் இன்று முதல் இக் கட்சியில் சேர்ந்துவிட்டதாக சொன்னவுடன் எல்லோரும் கை தட்டினார்கள். அடுத்தாப் போல் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பேசி முடிவுபெற்றவுடன் ஜனங்கள் அவரை நீங்கள் இந்தக் கக்ஷியில் சேர்ந்துவிட்டீர்களா இல்லையா என்று கேட்டார்கள். ஸ்ரீமான் நாயுடு எழுந்து சேர்ந்துவிட்டதாக சொன்னார். அடுத்தாப்போல் ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் பேசும்போது தான் இந்த கக்ஷியில் சேர்ந்துவிட்டேன் என்று சொல்லுவதற்கு சூசனையாய் தனக்கு இனிமேல் பனகால் ராஜாதான் தலைவர் என்று சொல்லி உட்கார்ந்தார். மறுபடியும் ஒருதரம் ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் எழுந்து சபையைப் பார்த்து எங்களை நீங்கள், நாங்கள் இக் கக்ஷியில்சேர்ந்து விட்டதாக சொல்லும்படி உறுதிவாங்கிக் கொண்டீர்கள். ஆனால் நான் உங்களில சிலராவது சேரவேண்டுமென்பதைப் பற்றி அம்மாதிரி அவ நம்பிக்கைப் பட்டு உறுதிகேள்க்கவில்லை. ஆனாலும் ஸ்ரீமான்கள் ராமசாமிமுதலியார் சர்பாத்ரோ முதலியவர்கள் காங்கிரசில் சேருவார்கள என்று நான் நம்புகிறேன்" என்று சொனனார்.

ஸ்ரீமான் செட்டியார் முதலில் பேசிவிட்டு உட்கார்ந்தவர் மறுபடியும் எழுந்துவந்து இமமாதிரி சொன்னதைபபார்த்த உடன் அங்குள்ளவர்களுக்கு இது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவால்தான் தூண்டப்பட்டு கேள்க்கவிட்டு இருக்கவேண்டும் என்று தோன்றிற்று. ஆனபோதிலும் அம்மாதிரி ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் ஒன்றும் இதற்கு முன் ஏற்பட்டு இருக்கவில்லை என்பது வெளியாவதற்கு அந்த சந்தர்ப்பம் அனுகூலமாயிருந்தது. இம் மூவரையும் வரவேற்று ஸ்ரீமான் ராமசாமி முதலியார் நாயக்கர் ஆரியா முதலியவர்கள் பேசினார்கள்.

## நம்பிக்கை இல்லை தீர்மானம்.

இந்தக் காக்ஷி முடிந்தவுடன் அடுத்தபடியாக சென்னை கவர்னர் பிரபுவிடம நம்பிக்கைஇல்லை என்கிற தீர்மானம் வந்ததும் ஜனங்களுக்கு பெருத்த ஆச்சரியமும் குதூகலமும ஏற்பட்டுவிட்டது. அதை முதல் முதல் பிரேரேபித்த ஸ்ரீமான் மதுரை எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இந்த கவர்னர் ஆட்சியில் உள்ள கெடுதல்களை எடுத்துச்சொல்லி பிரேரேபித்தும் அதற்கு ஒரு திருத்தமாக ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் கவர்னரை திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டும் என்பதாக ஒரு திருத்தம் கொண்டுவந்தார் அத் திருத்தத்தின் மேல் நாயக்கர் பேசும்போது: இம்மாதிரி திருத்தம் கொண்டுவந்ததினாலேயே கவர்னரை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் திருப்பி அழைத்துக்கொள்ளமாட்டார்கள் என்பது தனக்கு தெரியுமென்றும், இந்த கவர்னர்காலத்தில் சென்னை அரசாங்கத்தில் ஏற்பட்ட அசக்கியங்களையும் நாணயக் குறைவுகளையும் எடுத்துக்காட்டவே இத் தீர்மானம் கொண்டுவருவதாகவும், தான் மகாநாட்டு விஷயாலோசனைக் கமிட்டிக்கு இத் தீர்மானம் அனுப்பும்போது அவர்கள் அதில் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்று எழுதி இருந்ததாகவும், தான் விஷயாலோசனைக் கமிட்டிக்கு போக சரிப்படாத காரணத்தால் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்பதை எடுத்துவிட்டு நம்பிக்கை இல்லை என்கிற வார்த்தைவைத்து இருப்பதாகவும் நம்பிகை இல்லை என்று சொல்வதால் கவர்னருக்கு ஒன்றும் முழுகிப்போகாது என்றும, கவர்னர் துணிந்தே ஏது வந்தாலும்சரி தன்னுடைய அரசாக்ஷி காலத்தில் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி நடந்து காலத்தை தாட்டிவிடுகிறது என்று தீர்மானம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்றும், மந்திரிகளும் நிர்வாக சபை மெம்பர்களும் செய்யும் காரியங்களுக்கு கவர்னரே பொறுப்பாளியாயாவார் என்றும, இந்த கவர்னர் காலத்தில் அரசாங்கம் பாழடைந்தது போல் எந்தக் காலத்திலும் இப்படி நடைபெறவில்லையென்றும், அரசாங்கத்தின் எந்தத்துறை எடுத்துக் கொண்டாலும் நாணயமாய் நடைபெறுகிறது என்று சொல்லுவதற்கு வேண்டிய காரணமில்லை என்றும், ஐகோர்ட்டு முதல் நீதியில் சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறதென்றும், நிர்வாக சபை அதை விட மோசமாகவும பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாயிருக்கிறதென்றும, ஸ்தலஸ்தாபன லாக்காக்களின் நிர்வாகங்கள் மிக மிக மோசமென்றும், ஈரோடு முதலிய ஸ்தலஸ்தாபனங்களில் ஏற்பட்டுள்ள நாணயக் குறைவுகளுக்கு எல்லையே இல்லை என்றும், அரசாங்க அதிகாரிகள் மனப்பூர்வமாய் தெரிந்தே அனுமதி கொடுக்கிறார்கள் என்றே சொல்லவேண்டியிருக்கிறதென்றும், இம்மாதிரி ஆட்சி இன்னம் கொஞ்சகாலத்திற்கு நடைபெற்றால் நமது நாட்டுக்கு சுலபத்தில் திருத்த முடியாத கொடுமைகள் ஏற்பட்டு விடுமென்றும் சொன்னதோடு, காங்கிரசில் இம்மாதிரி தீர்மானங்கள் கொண்டுவருவது சர்க்காரைமிரட்டி உத்தியோகம் சம்பாதிப்பதற்கல்லாமல் அதில் அவ்வளவு உண்மையான எண்ணம் இருககாது என்று இம்மாதிரி தீர்மானங்கள் வந்ததின் பலனாக வேசர்க்காரும் பயந்து பலருக்கு பெரும் உத்தியோகங்கள் கொடுத்திருக்கிறார்கள என்பதுபோல் அல்ல இத் தீர்மானம். இது வாஸ்தவத்திலேயே கவர்னர் பிரபுவின் ஆக்ஷியின் ஊழலையும் கொடுமையையும் பொறுக்கமாட்டாமல் கொண்டு வந்த தீர்மானம் என்றும் சொல்லி முடித்தார். ஜனங்கள் எல்லோரும் ஒரே அடியாய் ஆம்! ஆம்!! என்று ஆரவாரம் செய்தார்கள் சென்னைத் தலைவர்கள் என்போர்களில் சிலர் ஒவ்வொருவராய் எழுந்துபோக ஆரம்பித்தார்கள். சிலர் அதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றார்கள் சர்பாத்ரோ கூட்டத்திற்கு வரவேயில்லை. மகாநாட்டுத்தலைவர் மாத்திரம் கண்டிப்பாய் இத்தீர்மானம் கூடாது என்பதாகவும், நம்பிக்கை இல்லை தீர்மானம் திருப்பி அழைப்பதைவிட முக்கியமானதென்றும், வியாக்கியானம் செய்து, திருப்பி வாங்கிக்கொள்ளும்படி சொன்னார். பனகால் ராஜா முகத்தில் பயக்குறியும ஆச்சரியக்குறியும் தோன்றிற்று. கூட்டத்தில் உள்ளவர்கள் வாபீசு வாங்கக்கூடாது என்று ஆரவாரம் செய்தார்கள். கடைசியாக தலைவர் வார்த்தைக்கும் ஸ்ரீமான்கள் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார் ஆகியவர்கள் வார்த்தைக்கும் கட்டுப்பட்டு சபையோரின் அபிப்பிராயத்திற்கு மாறாக வாபீசு வாங்கிக்கொள்ள நேர்ந்தது. மற்ற தீர்மானங்களில் மந்திரி பதவி ஒப்புக்கொள்வதில்லை என்பதும, மேட்டூர் திட்டத்தைக் கண்டித்தும் அதனுள் இருக்கும் ஆபாசத்தை விசாரிக்க கமிட்டி நியமிக்க வேண்டும் என்பதும், யாவரும் கதர் உடுக்க வேண்டும் என்பதும், தொழிலாளர்களுக்கு தனி பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும என்பதும், மதத்தின் பேரால் உள்ள மூடக் கொள்கைகளையும் பார்ப்பனப் புரோகிதத்தையும் விலக்கவேண்டுமென்பதுமே முக்கிய தீர்மானங்களாகும். இத் தீர்மானங்கள் பேசப்படும் போதும் நிறைவேற்றப்படும் போதும் மக்களுக்கேற்பட்ட உணர்ச்சிக்கு அளவேயில்லை. ஏறக்குறைய மகாநாட்டில் 100-க்கு 60 பேருக்கு மேலாக கதர் கட்டி இருந்தார்கள் என்றே சொல்லவேண்டும். ஸ்ரீமான்கள் ஏ. இராமசாமி முதலியார், தலைவர் குமாரசாமி ரெட்டியார் முதலிய தலைவர்கள் கூட கதர் உடையுடனேயே தோன்றினார்கள். மகாநாட்டுத் தீர்மானங்கள் முடிவடைந்ததும் தலைவர் முதலியோருக்கு நன்றி செலுத்தும் காக்ஷி ஆரம்பிக்கப்பட்டது.

முதல் முதலாக வரவேற்பு கமிட்டி தலைவர் ஸ்ரீமான் ரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் உபசாரணைக் கமிட்டியின் சார்பாக வந்தனம் செலுத்துகையில், இந்த மகாநாட்டுக்கு வரவேற்பு தலைவராக இருக்கும்படி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் என்னைக்கேட்டபொழுது நான் ஊத்துக்குளி ஜமீன்தாரவர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லி மறுத்துவிட்டேன் என்றும், ஜமீன்தாரவர்கள் தனக்கு காயலாவாயிருப்பதாய்ச் சொல்லி என்னையே இருக்க வேண்டுமென்று கட்டளை இட்டதால் எல்லாப்பொறுப்பையும் நாயக்கர் பேரில் போட்டுவிட்டு நான் பெயருக்கு மாத்திரம் ஒப்புக் கொண்டேன் என்றும், அப்படி இருந்தும் உபசாரணைக் கமிட்டி அங்கத்தினர்கள் கள் தன் விஷயத்தில் மிகுதியும் அன்பு காட்டி எல்லாபொறுப்பும் அவர்களே ஏற்றுக்கொண்டார்கள் என்றும், மகாநாட்டு தீர்மானங்கள் ஒழுங்காக நிறைவேறி எல்லோருக்கும் சந்தோஷமுண்டாகவும் ஒற்றுமை ஏற்படவும் ஸ்ரீமான் நாயக்கரே முக்கிய காரணஸ்தரென்றும், அவர் கட்டளைப்படியே இம்மகாநாடு கூட்டப்பட்டதென்

றும், வரவேற்பு விஷயத்தில் என்ன குறைகள் இருந்தபோதிலும் மன்னிக்கவேண்டுமென்றும், மகாநாட்டுக்கு விஜயம் செய்தவர்கள் பிரதிநிதிகள் மற்றும் வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் நன்றி செலுத்துவதாகவும், சொன்னார். காரியதரிசிகளுக்காக ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எழுந்து இந்த மகாநாடு நடப்பதைப்பற்றி தான் ஒரு சிறிதும் பயப்படவில்லை என்றும், வரவேற்பு தலைவரும் தானும் வழிபடும் குமரக்கடவுளுடைய அருள் தங்களுக்கு அதிகமாயுண்டென்ற நம்பிக்கையோடு அக்குமரக்கடவுளின் பெயர் கொண்ட தலைவர் குமாரசாமி ரெட்டியார் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டதுடன் தாங்கள் இம்மகாநாடு விஷயத்தில் ஒரு சிறு கவலைகூட கொள்ளவில்லை என்றும், வசூல் முதல் இதுவரை ஒவ்வொரு காரியமும் தானாகவே நிறைவேறி வந்திருக்கிறதென்றும், மகாநாட்டில் முடிவு பெற்ற தீர்மானங்கள் எப்படி இருந்தாலும் அதன்படி கட்டுப்பட்டு நடக்கத் தயாராகவேயிருந்தோமே அல்லாமல் இன்ன விதம் தான் இருக்கவேண்டும் என்கிற கவலைகூட தாங்கள் கொள்ளவில்லை என்றும், எல்லோருக்கும திருப்திகரமாய் மகா நாடு நடைபெற்றதற்கு அனுகூலமாயிருந்தவர்கள் எல்லோருக்கும் தனது மனமார்ந்த வந்தனமென்றும், சொல்லி முடித்து எல்லோருக்கும் மாலையிட்டார். பிறகு ஸ்ரீமான் தஞ்சை பன்னீர்செல்வம் அவர்கள் பிரதிநிதிகள் சார்பாக எழுந்து பேசுகையில் மகாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளுக்கு யாதொரு குறைவும் இல்லை என்றும் அளவுக்குமீறிய விருந்துகளும் சவுகரியங்களும் இருந்ததென்றும், அதுபோலவே தீர்மானங்களும் நமது சமூகத்திற்கும் தேசத்தின் முற்போக்குக்குமான தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கிறதென்றும், தீர்மானம் செய்ததுமாத்திரம் போதாதென்றும இதை அமுலில் கொண்டுவரும் விஷயத்தில் ஒவ்வொருவரும் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இஷ்டப்பட்டவர்கள் காங்கிரஸில் சேரலாம் என்கிற தீர்மானத்திற்கு தான் மிகவும் விரோதமாயிருந்ததாகவும், சண்டைபோடவேதான் வந்ததாகவும், தன்னைப்போல் அநேகர் வந்திருப்பதாகவும்; ஆனால் அத்தனை பேரையும் பிரசிடெண்டு தனது சாமர்த்தியத்தில் மயக்கி, வசப்படுத்தி எல்லோரையும் ஒற்றுமைப்படுத்திவிட்டாரென்றும், ஆனாலும் நமது வேலைகள் ஓய்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் சொல்லிமுடித்தார்.

மகாநாடு வாலெண்டியர் கேப்டன் ஸ்ரீமான் பொன்னைய கவுடர் (மதராஸ் தாசேகவுடர் அண்டு கோ. புரொப்ரைட்டர்) எழுந்து வாலிண்டியர்கள் நடந்துகொண்டதில் ஏதாவது தப்பிதமிருந்தால் மன்னித்துக்கொள்ளும்படிக்கும, வாலிண்டியர்கள் 300 பேரும் தனது இஷ்டத்திற்கு ஒரு சிறிதும் மாறுபடாமல் மிகவும் திருப்திகரமாய் நடந்துகொண்டார்களென்றும், அவர்களில் ஏதாவது தப்பிதம் இருந்தால் அது தன்னுடைய தப்பிதமே ஆகுமென்றும் சொல்லி முடித்தார். காரைக்குடி "குமரன்" ஆசிரியர் ஸ்ரீமான் சொ. முருகப்பசெட்டியாரவர்கள் எழுந்து பிரதிநிதிகள் சார்பாக சிலவார்த்தை சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில் அவர் எழுந்து தான் இம்மகாநாட்டைப்பார்த்து மிகுந்த மகிழ்வதாகவும், தமிழ் நாட்டில் இம்மாதிரி மகாநாடு நடந்ததுமில்லை சொற்பம் என்றும் வரவேற்பு கமிட்டியாரின் ஏற்பாடு மிகவும் பாராட்டத்தக்கதென்றும், ராஜிதீர்மானமும் தனது இஷ்டமென்றும். தானும் அப்படியே தனது பத்திரிகையில் எழுதிவந்ததாகவும், மற்றும் சமத்துவம் சம்பந்தமான தீர்மானங்களும் மற்ற தீர்மானங்களும் காலத்துக்கு ஏற்றதுதானென்றும், அத்தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டியது என்றும், தனவைசியநாட்டிலிருந்து தாங்கள் வெகுபேர் வந்திருப்பதாகவும் சொல்லிமுடித்தார்.

பிறகு ஸ்ரீமான் ஈ. வே. ராமசாமி நாயக்கர் எழுந்து தலைவருக்கும் வரவேற்புக் கமிட்டியாருக்கும் கேப்டனுக்கும் தொண்டர்களுக்கும் காரியதரிசிகளுக்கும் கொட்டகைக்காரருக்கும் மற்றும் கோயமுத்தூர் நண்பருக்கும் நன்றி செலுத்தும்போது பேசியவையாவன,

தலைவருக்கு:— கோவைமகாநாடு ஜில்லா மகாநாடாக கூட்டுவதாயிருந்த காலத்தில் முதல் முதல் ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரவர்கள் பெயரை வரவேற்புக்கமிட்டிக்கு சொன்னவுடன் வெகு குதூகலமாக ஏற்றுக்கொண்டார்கள் என்றும், ஸ்ரீமான் ரெட்டியாரவர்களுக்கு எழுதினவுடன் தேசத்திற்கு ஒரு மனிதன் செய்யவேண்டிய கடனைச்செய்யும்படி கூப்பிடும்போது தான் எவ்விதத்திலும் ஆக்ஷேபனை சொல்லுவதில்லை என்று சொல்லி ஒப்புக்கொண்டார்கள். மறுபடி இது மாகாணமகாநாடாக மாறினவுடன் ஸ்ரீமான் ரெட்டியாரவர்கள் தான் ஜில்லாமகாநாடென்று ஒப்புக்கொண்டதாகவும் இப்போது மாகாண மகாநாடாய் விட்டதால வேறு யாரையாவது தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி எழுதிவிட்டாரென்றும், மறுபடி சென்னை தென் இந்திய நலஉரிமைச்சங்கமும் வரவேற்புக்கமிட்டியும் ஸ்ரீமான் ரெட்டியாரவர்களையே வேண்டிக்கொண்டதாகவும், அவர் யாதொரு தடையும் சொல்லாமல் ஒப்புக்கொண்டாரென்றும், சட்டசபையில் ஸ்ரீமான் ரெட்டியார் அவர்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை வெட்டவெளியாக்கிவிட்ட வீரர் என்றும், மற்றவர்களைப்போல் அவர் படாடோபம் செய்துகொள்ளாமல் அடக்கத்திலிருப்பவர் என்றும், இம்மகாநாடு நடத்தும் விஷயத்தில் அவர் யாதொரு பிரயாசையும் எடுத்துக்கொள்ளாமல் தனது புன்னகையைக்கொண்டே எல்லாக்காரியங்களையும் சாதித்துவிட்டார் என்றும், அவர் இளமையிலிருந்தே பொது நன்மையில ஈடுபட்டு வந்தவர் என்றும், உதாரணமாக பங்காள பிரிவினை கிளர்ச்சி காலத்தில் தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்கம்பெனிக்கு எவ்வளவோ பாடுபட்டு லக்ஷக்கணக்கான திரவியம் சேர்த்துக்கொடுத்துழைத்து வந்தவர்கள் என்றும், மகாநாட்டில் யாருக்கும எவ்வித குறையுமின்றி எவ்வித அபிப்பிராயபேதமும் இன்றி தானும் யாருக்கும் அதிருப்தியாக நடந்துகொண்டதாயில்லாமல் நடத்தியது மிகவும் குறிப்பிடத்தக்கது என்றும், எவ்வளவோ தட்டுடல் வாதப்பிரதிவாதம் நடக்கும் என்று எண்ணியிருந்த மகாநாடானது ஒரு சிறு சப்தமகூட இல்லாமல் நிறைவேற்றிக்கொடுத்தார் என்றும், சொல்லிமுடித்து வரவேற்பு கமிட்டியார் எடுத்துக்கொண்ட சிரமம் மிகவும் பாராட்டத்தக்கதென்றும், காரியதரிசிகள் ஒவ்வொருவரும பெரியபெரிய பிரபுக்களும் மிராசுதார்களும் தக்க பொறுப்புள்ளவர்களுமானவர்கள் என்றும், அவர்களில் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் தன்னுடைய உடல் நலிவோடு ஊர் ஊராய் அலைந்ததல்லாமல் தனது வீட்டையும் காலி செய்து விட்டுவிட்டு அவர் எடுத்துக் கொண்ட சிரமம் மிகவும் அதிகமானதென்றும், ராஜித்தீர்மானத்திற்காகவேண்டி ஒவ்வொரு தலைவர்கள் வீட்டுக்கும் ஒவ்வொரு உழைப்பாளிகள் ஜாகைக்கும் தூது நடந்து கணக்கு வழக்கு இல்லையென்றும், தீர்மான வாசகங்கள் எல்லாம் அவர் கைப்படவே சுமார் 20, 30 தடவை எழுதித்திருத்தினர் என்றும், அவர் பெரிய ராஜ தந்திரி என்றும், அடுத்த காரியதரிசி ஸ்ரீமான் பி. என். ஜி. நாயுடு அண்டு சன்ஸ் வெங்கிடசாமி நாயுடு அவர்கள் ஒரு பெரிய மில் சொந்தக்காரர் என்றும், பெரிய பெரிய தர்மங்கள் எல்லாம் செய்தவர் என்றும், அவர் இம்மகாநாடு விஷயத்தில் சகோதரர்களுடன் எவ்வளவோ கஷ்டப்பட்டார் என்றும், எவ்வளவோ ஆசாரங்களாய் இருந்தவர்கள் இப்போது பெரிய சீர்திருத்தக்காரரானதோடு இப்பேர்ப் பட்ட பொதுக்காரியங்களுக்கு உழைக்கும் விஷயத்தில் யாரையும் விட முன்னுக்கு தானாகவே வந்து தாராளமாய் உழைக்கிறார் என்றும், மற்றொருகாரியதரிசியான ஸ்ரீமான் பி. எஸ். சாத்தப்ப செட்டியார் அவர்கள் அநேக மில்லுக்கு சொந்தக்காரர் என்றும், அவரது தகப்பனார் ஸ்ரீமான் எஸ். ராவ் பகதூர் பி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மிகுந்த தெய்வ பக்தியும் பிராமண விசுவாசமும் எல்லோருக்கும் நல்லவர்களாயிருக்க வேண்டும் என்கிற தாட்சியண்ய சுபாவமும் உடையவர் இம்மகாநாடு நடைபெறுவதால் பார்ப்பனர்களுக்கு வருத்தம் வருமோ என்பதாக நினைத்து தனது குமாரனை இதில் அதிகமாக பிரவேசிக்கக் கூடாது என்று கருதி மகா நாடு விஷயத்தில் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளாதிருக்கச் செய்தும் ஸ்ரீமான் சாத்தப்ப செட்டியாரவர்கள் தனது அருமைத் தகப்பனருக்கு தக்க சமாதானமும் சொல்லி மகாநாட்டுப்பண வசூலுக்கு தானே முக்கிய காரணஸ்தராயிருந்ததல்லாமல் முக்கிய தலைவர்களான ஸ்ரீமான்கள் பணக்கால் ராஜா, சர். பாத்ரோ, முனிசாமிநாயுடு, ராமசாமி முதலியார் முதலிய கனவான்களுக்கும் தனவைசிய நாட்டிலிருந்து வந்த எல்லாபிரதி நிதிகளுக்கும், தனது வீட்டிலேயே ஜாகை வைத்துக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய சப்ளை முதலியவை செய்ததோடு மகாநாடு ராஜி தீர்மானத்திலும் தான் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டு அதாவது

[இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க]

## ஈரோட்டில் புதிய ஹைஸ்கூல்

(சித்திரபுத்திரன் எழுதுவது)

ஈரோட்டில் மகாஜன ஹைஸ்கூல் என்பதாக ஒரு பள்ளிக்கூடம் பல பெயர்களுடன் சுமார் 40 வருஷங்களுக்கு மேலாகவே இருந்துவருகிறது. இது இருக்கும் போதே லண்டன்மிஷின் என்கிற ஒரு கிருஸ்தவ மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் மேல்கொண்டு ஒரு ஹைஸ்கூலை சுமார் 20 வருஷங்களுக்கு முன்பாக ஆரம்பித்தார்கள். அந்த மிஷின்காரர் தங்களது செல்வாக்கால் கல்வி இலாகா அதிகாரிகளையும் நீதிநிர்வாக இலாகா அதிகாரிகளையும்கொண்டு தங்களாலான உபத்திரவமெல்லாம் செய்துபார்த்தும் மேற்படி மகாஜன ஹைஸ்கூலை அசைக்க முடியவேயில்லை. சில பையன்களுக்குச் சம்பளத்தைக் குறைத்தார்கள். பையன்கள் பெற்றோர்களுக்கு அரசாங்கத்தில்சிபார்சு செய்து உத்தியோகம் வாங்கிகொடுப்பதும் கௌரவ உத்தியோகம் செய்வித்துக்கொடுப்பதும் ஆண்பிள்ளைகள் வகுப்புக்கு பெண்களை உபாத்தியாயர்களாக வைப்பதும், உள்ளூர்கட்சி பிரதி கட்சிகளில் கலந்துகொண்டு கட்சிக்கு விரோதமாய் மற்றொரு கட்சிக்கு அனுகூலமாக உண்மையற்ற விஷயங்களை கோர்ட்டில் சாட்சி சொல்லுவதும், இன்னும் எவ்வளவோ கூடா ஒழுங்கமான காரியங்களை எல்லாம் செய்து பார்த்தார்கள். எவ்வளவு செய்தும் மகாஜன ஸ்கூலை ஒழிக்க முடியாமல் போனதோடு கடைசியாய் நஷ்டம் தாங்க முடியாமல் லண்டன்மிஷன்காரர்களே தங்களது ஹைஸ்கூலை எடுத்துவிட நேர்ந்தது. இதன் பலனாக அவர்கள் கட்டடம் பள்ளிக்கூட சாமான் இவைகள் உபயோகமில்லாமல் போனதோடு சில ஆசாமிகளுக்கும் வேலை இல்லாமல் போக நேர்ந்துவிட்டது. இதற்காக வேண்டி அந்த லண்டன்மிஷின் நிர்வாகிகள் ஒரு தோது கண்டு பிடித்தார்கள். அது என்னவென்றால் ஈரோடு முனிசிபாலிட்டி தலையில் இதைப் போட்டுவிட்டால் தங்கள் கட்டடத்திற்கும் வாடகைவரும். தங்கள்சாமானுக்கும் நல்ல விலை கிடைக்கும், தங்கள் மதத்தில சேர்த்துக் கொண்ட ஆசாமிகளுக்கும வேலைகொடுக்கலாமென்பதாக எண்ணி மெள்ள முனிசிபல் சேர்மெனைப் பிடித்தார்கள் ஈரோடு முனிசிபல் சேர்மென் சங்கதியைப்பற்றி 'குடி அரசு' இதற்குமுன் எத்தனையோதடவை எழுதிஎழுதி பேனாவெல்லாம் துர்நாற்றம் வீசும்படியாயிருக்கிறது என்பது உலகமே அறியும். அப்பேர்ப்பட்ட ஒரு பெரிய செலவாக்குள்ள மிஷனரி கிடைத்துவிட்டால் பிறகு அவருக்கு என்ன குறைவு அச்சேர்மெனின் சகல அக்கிரமங்களுக்கும் தான் அடிக்கடி கலெக்டர், ஸ்தலஸ்தாபன இலாகா நிர்வாகிகள், காரியஸ்தர்கள் முதலியவர்களுக்கு சிபார்சு செய்துவந்ததோடல்லாமல் கவுன்சிலில் நடந்த நாணயக்குறைவான காரியங்களுக்கும் உதவியாயிருந்து நியாயஸ்தலங்களில்கூட உண்மைக்கு மாறாக சாக்ஷி முதலியவைகளும் சொல்லி அவருடைய விஷயங்களை நிவர்த்தித்து இவ்வளவுக்கும் பிரதிப்பிரயோஜனமாகப் பள்ளிக்கூடத்தை முனிசிபாலிட்டியார் [illegible]த்தும்படிசெய்துகொண்டு கட்டடத்தையும் சாமான்களையும் முனிசிபாலிட்டியார் தலையிலேயேகட்டி தனது ஆசாமிகளுக்கும் உத்தியோகம் வாங்கிக்கொடுத்துவிட்டார். இதன்மூலம் சேர்மெனுக்கு நஷ்டமுண்டா? ஒருதம்பிடியும் கிடையாது பின்னும் அதிலும் கொஞ்சம் உத்தியோக நியமனம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் லாபம் கிடைக்குமேயல்லாமல் நஷ்டமில்லை நஷ்டம் ஏற்படுவதெல்லாம் ஊரார் வரிப்பணமே தவிர வேறில்லை. ஆதலால் இந்த விஷயம் முனிசிபல் கவுன்சிலில் பாசான கற்றுக்காரணமே பொதுஜனங்களுக்கு சொல்லவேண்டியதில்லை. மொத்தம் 20 கவுன்சிலர்களில் 12 கவுன்சிலர்கள் இந்த சேர்மென் அக்கிரமத்தையும் மிஷினரி கவுன்சிலர் அக்கிரமத்தையும் அவர் சிபார்சால் கலக்டர்முதலிய அதிகாரிகளின் வக்கிரமத்தையும் சகிக்கமாட்டாமல் தங்கள்சுயமரியாதையை உத்தேசித்து கவுன்சிலர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வந்து விட்டார்கள். அதற்காக நடந்த மறுதேர்தல்களில் சேர்மென் இஷ்டப்படி அவரால் அழைக்கப்பட்டவர்களே வந்து சேர்ந்தார்கள்

மெஜாரிட்டியாராகிய 12 கவுன்சிலர்கள் இருக்கும்போதே நாணயக்குறைவுகள் அக்கிரமங்கள் முதலியன நடக்கும் போது, சேர்மெனின் கைகள் கால்கள் வால்கள்போன்ற கவுன்சிலர்கள் இருக்கும் போது இந்த தீர்மானம் நிறைவேறுவது அதிசய மாகுமா? ஒருக்காலும் அதிசயமாகாது

பிறகு இத்தீர்மானம் எஜுகேஷன் கவுன்சிலில் தோற்றுப்போயும் அதற்கு மேல் மிஷினரி துரை சிபார்சு பிடித்து விட்டார்கள் மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகிகள் படிப்பு மந்திரியாகிய டாக்டர் சுப்பராயன் அவர்களை தனி முறையில் பேட்டி கண்டார்கள். அவர் ஆகட்டும் சாதித்து விடுகிறேன், வேறு பள்ளிக்கூடத்திற்கு அனுமதி கொடுப்பதில்லை என்று சொன்னதாக திருப்தியுடன் திரும்பி வந்து விட்டார்கள். கடைசியாக துரை சிபார்சுப்படி 4-வது 5-வது 6-வது பாரங்கள் ஒரே அடியாய் துவக்கும்படி மந்திரி உத்தரவு செய்து விட்டார். அவர் என்ன செய்வார்; பாவம்! சேர்மென் அதற்குத் தகுந்த ஆளை சிபார்சாகப் பிடித்துக்கொண்டு போனால் மந்திரி பேசாமல் உத்தரவு போட்டுத்தானே ஆகவேண்டும். அதுபோல் உத்தரவு வந்ததும் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளை சேர்ப்பதில் சேர்மென் பிள்ளைகள் வேட்டையாட ஆரம்பித்தார். சம்பளம் குறைப்பதாய்ச் சொன்னார் பூராச் சம்பளம் தள்ளிவிடுவதாகச்சொன்னார். சாப்பாடு போடுவதாகச் சொன்னார். நாய் அடிப்பதற்கு ஒரு நாய்க்கு இவ்வளவு என்று கூலி கொடுப்பது போல் ஒரு பிள்ளையைக் கொண்டுவந்து சேர்த்தால இவ்வளவு கூலிஎன்று சொன்னார். பிள்ளை கொண்டுவருபவருக்கு வாத்தியார்வேலை கொடுப்பதாகச்சொன்னார். தானும் இரவில் மோட்டார் போட்டுக்கொண்டு கிராமம், கிராமமாகச் சுற்றினார். கடைசியாக வகுப்பு ஒன்றுக்கு ஒன்று, இரண்டு, மூன்று பெஞ்சுகள் நிறையும்படி பிள்ளைகள் சேர்க்கப்பட்டார்கள். இந்த வேட்டையைப் பார்த்து சகிக்கமாட்டாமல் மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகத் தலைவர் கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட்டு செய்து சர்க்காரின் கல்வி இலாகா சட்டங்களை எடுத்துக்காட்டிய பின்பு 4-வது 5-வது பாரங்களை எடுத்துவிடும்படி சேர்மெனுக்கு உத்தரவு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு சேர்மெனும் ஒரு மிஷினும் லாபமடைவதற்கு ஊரார் பணம் எவ்வளவு நஷ்டம் ஆவது? ஒழுங்காக நடைபெறும் பள்ளிக்கூடம் எவ்வளவு கஷ்டப்படுவது என்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.


மகாஜன ஹைஸ்கூல் நிர்வாகம் சரியாயில்லை. ஆதலால் இன்னமொரு பள்ளிக்கூடம் வேண்டும் என்று சேர்மெனும் மிஷின் துரையும் பல இடங்களில் சொன்னதாகப் பிரஸ்தாபம். அப்படிச் சொல்லி இருந்தால் அது சுத்தப்புரட்டு என்றே சொல்லவேண்டும்.

மகாஜன ஸ்கூல் நிர்வாகம் சரியல்ல என்பது உண்மையானால் மேலே சொன்னபடி முறைப்படி எவ்வளவோ சௌகரியங்களுடன் லண்டன் மிஷன் காரர்கள் 20-வருஷ காலம் பள்ளிக்கூடம் நடத்தினார்களே அப்பொழுது ஏன் பிள்ளைகள் அதில் போதுமானபடி போய் சேர்ந்திருக்கக்கூடாது? அதை ஏன் மிஷன்காரர்கள் எடுக்க நேரிட்டது? இவர்கள இதற்கு என்னபதில் சொல்லுவார்கள்? இனிமேலாவது ஊர் மகாஜனங்களுக்கு நல்லுணர்ச்சி ஏற்பட்டு இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களும், நஷ்டங்களும் நடக்காமல் பார்த்துக்கொள்ளுவார்களா?

## காந்தி அடிகளும் சங்கராச்சாரியரா?

குலசேகரன் பட்டணத்திற்கு காந்தி அடிகளை அழைக்கும் பொருட்டு பெரியார் ஒருவர் திருநெல்வேலிக்குப்போய் 10-3-27 அன்று உயர்திரு இராசகோபாலச்சாரியாரைப் பார்த்தார் கேள்விகள் பல கேட்டார். ஒன்றுக்கும் ஒழுங்கானபதிலே கொடுத்திலர் ஆச்சாரியார். சினமோ சீறி எழுந்தது. ஏன்? குலசைப் பெரியார்வினாக்கள் பார்ப்பனர்கள் "திலகர்சுயராச்சிய நிதி' க்குச் செய்துள்ள மோசத்தைக் குறித்தவைகள். அம்மட்டோ! பார்ப்பனர் கூட்டத்தார் கல்கத்தாவில் நடந்த "ஒத்துழையாமை" தனிக் காங்கிரசில், இதே காந்தி அடிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கையினராய், காங்கிரசு பணத்தை வீண் விரயஞ் செய்ததையும் பற்றியன. ஆனதால் பொறாமையே உருவெடுத்துவந்தால்போலுள்ள காந்தி அடிகளின் முதலடியாருக்கு பொறுமைக்கு மாறிய முனிவு பொங்கிற்று. காய்ந்தார், கண் சிவந்தார், கண்டிலர் மறு மொழி. எதிர் நின்ற பெரியாரோ பேசாதிருந்தார். இச்செயல்களை சொன்னார். "ஒன்றுமட்டும் எங்கள் ஊரின் நிதியைக்கொண்டு அங்கேயே நூல்நூற்கும் தொழிலை வளர்க்க, "எல்லா இந்தியா நூல் நூற்கும் சங்க"க் கட்டளைகளுக்கு அடங்கி, வேண்டுவன செய்வோம். நிதியை உங்கள் கையில்கொடோம். உங்களிடம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை" என்பதே. ஆச்சாரியார் மிகுந்த சினத்துடன், "என் உரைத்தீர், பணத்தை

இதன் தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஆடி 2உ

# நமது வேலை.

"குடி அரசு" பத்திரிகை தோன்றி 27 மாதங்கள் ஆகின்றதெனினும் அதன் மூலம் தேசத்திற்கும் சமூகத்திற்கும் நமக்கு சரி என்று தோன்றிய வழியில் நம்மால் கூடிய தொண்டை ஆற்றி வந்திருக்கிறோம். எனினும் செய்யவேண்டிய வேலை எவ்வளவோ பாக்கி இருக்கிறது. முன் ஒரு சமயம் நாம் எழுதியது போல் "குடி அரசு" பத்திரிகை வேலை மாத்திரம் அல்லாமல் அதன் கொள்கையைப் பாமர மக்கள் மனதில் பதியச்செய்ய ஊர் ஊராய் திரிந்து பிரசாரமும் செய்யவேண்டிய பொறுப்பு இனியும் எவ்வளவோ மடங்கு அதிகமாயிருந்து வருகிறது. கோவை மகாநாட்டுத் தீர்மானங்களின் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குள் இனி அபிப்பிராய பேதம் இருக்காது என்றும், பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்போர்களும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் நமது கொள்கைகளை பிரசாரம் செய்யும் என்றும், நமக்கும் போதிய ஓய்வு கிடைக்கும் என்றும், பல நண்பர்கள் கருதினார்கள். இப்போது அவைகள் ஒரு விநாடி கனவு போலவே முடிந்து விட்டது. பார்ப்பனரல்லாதார் கக்ஷியிலேயே யார் யாரை நமது சமூக முற்போக்கிற்கும் உண்மையான தேசமுன்னேற்றத்திற்கும் உதவி செய்வார்கள் என்று எண்ணி இருந்தோமோ அவர்கள் எல்லோரும் இப்போது காங்கிரஸ் பேரில் நாட்டம் கொண்டவர்களாக ஆகிவிட்டார்கள். அரசியல் புரட்டும், தேர்தல் பைத்தியமும் மக்களை அவ்வழி இழுக்கிறது. கோவைத் தீர்மானமானது யாரோ இரண்டொருவர் 'காங்கிரசில் சேர இஷ்டப்படுகிறவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்' என்று இருந்தாலும் ஏறக்குறைய பார்ப்பனரல்லாத பிரமுகர்கள் யாவருமே அதில் போய்ச் சேர தீர்மானித்துக் கொண்டதாகவே தெரியவருகிறது.

இது நிற்க, காங்கிரசிலிருந்து புதிதாக இவர் பார்ப்பனரல்லாத கக்ஷியில் வந்து சேர்ந்து இக்கக்ஷிக்கு உதவி புரிவார்கள் என்று எண்ணி இருந்தவர்கள் மகாநாட்டின்போது மாத்திரம் பொது மக்கள் மனம் திருப்தியடையும்படி பேசினார்களேயொழிய அவரவர்கள் ஊர் போய்ச் சேர்ந்தவுடன் "வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது" என்பதுபோல் பழையபடியே பார்ப்பனரல்லாத கக்ஷியை வைவதன் மூலம் பலனடைவதும் நமது எதிரியைப் புகழ்வதும் "நான் இன்னமும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் சேரவில்லை" என்று சொல்லிக் கொள்ளுவதுமாயிருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதார் பத்திரிகைகளும் இக்கக்ஷியை வைதால் தான் நாட்டில் தமக்கு செல்வாக்குண்டு என்று எண்ணும்படி ஆகிவிட்டதாகவே அறியக்கிடக்கின்றது. இவற்றை பார்க்கும்போது நாம் இதுவரை என்னதான் மகாநாடுகள் கூட்டி இருந்தாலும் எவ்வளவுதான் பிரசாரங்கள் செய்திருந்தாலும் பொதுவாகவே பார்ப்பனரல்லாதாரில் பலபிரபுக்களுக்கும் பொது வாழ்க்கையில் இறங்கி இருப்பவர்களுக்கும் பத்திரிகைகாரர்களுக்கும் பார்ப்பனர்களிடம் உள்ள பயம் இனியும் நீங்கவில்லை என்றே தான் சொல்லவேண்டி இருக்கிறது. உதாரணமாக "தமிழ் நாடு" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் கோவை மகாநாட்டிற்கு வந்து தனது அபிப்பிராயத்தைச் சொல்லிப் பார்ப்பனரல்லாதாருக்கு உழைக்கும் கக்ஷி இது தான் என்பதை ஒப்புக்கொண்டு தானும் இதில் சேர்ந்து விட்டதாக எல்லாரையும் நம்பும்படியாகச் செய்து இவ்வளவும் ஆனபின் மறுபடியும் "தமிழ்நாடு" பத்திரிகையில் இன்னமும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஜஸ்டிஸ் என்னும் பேரால் வைவதற்கு இடம் வைத்துக்கொண்டும் அதற்கு ஏதேதோ வியாக்கியானம் செய்து கொண்டும் "ஜஸ்டிஸ் கக்ஷியாரோடு தேசியவாதிகள் ஒருநாளும் ஒத்துழைக்க முடியாது" என்றும் ஒரே அடியாய் எழுதிவிட்டார். இவற்றைக் கவனிக்கும்போது இதுவரையிலும் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைப் பற்றி எப்படி தூற்றிவந்தாரோ அதே மாதிரிதான் இப்போதும் தூற்ற ஆரம்பித்திருக்கிறாரே அல்லாமல் கோவை மகாநாட்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களின் நிலைமையில் ஒன்றும் மாற்றமில்லை என்றே நினைக்கும்படி இருக்கிறது. ஜஸ்டிஸ் அரசியல் கொள்கையில் இவருக்குள்ள வித்தியாசம் என்ன என்பதை எழுதி இருந்தால் அது நன்றாயிருந்திருக்கும். ஜஸ்டிஸ் கக்ஷியாரானாலும் சரி தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தாரானாலும் சரி அவர்கள் உத்தியோகம் ஏற்றுக்கொண்டிருந்த காலத்திலும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடுவுக்கு அக்கக்ஷியினது அரசியல் திட்டம் பிடிக்கவில்லை. கவர்னருடன் சிநேகமாயிருந்த காலத்திலும் அரசியல் திட்டம் பிடிக்கவில்லை.

இப்போது உத்தியோகம் பெற்றுக் கொள்ளுவதில்லை என்று தீர்மானித்திருப்பதும் பிடிக்கவில்லை. கவர்னரிடம் நம்பிக்கையில்லை என்று தீர்மானித்திருப்பதும் பிடிக்கவில்லை. இனி இக்கக்ஷி எப்படி நடந்து கொண்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு பிடிக்குமோ நமக்கு தெரியவில்லை.

தவிரவும் மேட்டூர் புரட்டுகளைப்பற்றி மகாநாட்டில் பேசும்போதும், தீர்மானிக்கும் போதும் அதன் ஆபாசங்களைப்பற்றி 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' 'குடி அரசு' ஆகியவைகள் கலம் கலமாய் எழுதிவரும் போதும், பார்த்துக்கொண்டு சும்மாயிருந்த ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு திடீரென்று ஸ்ரீமான் சர். சி. பி. அய்யருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டார் என்றால் இதற்கு நாம் என்னதான் செய்து அவருக்கு உண்மை அறியும்படி செய்யமுடியும் என்பது நமக்குப் புரியவில்லை.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்களும் இதே மனப்போக்கையே காட்டி இருக்கிறார் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

"வகுப்பு வாதமிட்டுக்கொண்டிருந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் காங்கிரசில் நுழைய முன்வந்துள்ளனர்" என்றும், "ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் நேரிய நெஞ்சுடன் காங்கிரசில் சேரவேண்டும்" என்றும், "சமுதாய சீர்திருத்தத்தில் பற்றுடைய ஜஸ்டிஸ் கக்ஷியார் நாட்டிலெழும் அரசியல் கக்ஷிக்கு இடையூறு செய்யாமல் தன்னந் தனியாய் தமது தொண்டை நிகழ்த்துவாராக" என்றும் எழுதி இருப்பதிலிருந்தே அன்னாருடைய மனப்பான்மை வெளியாகிறது. ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாருடைய விளக்க உரையை ஸ்ரீமான் முதலியார் நன்றாய் கேட்டுக்கொண்டிருந்தார் என்பது அவரே ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். ஸ்ரீ செட்டியாரவர்களது சொற்பொழிவில் காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் கொள்கையில் வித்தியாசம் இல்லை என்றும், ஜஸ்டிஸ் கக்ஷி கேள்க்கும் சுயராஜ்யம் தான் காங்கிரஸ் கேள்கிறது என்றும், காங்கிரஸ் மற்ற வகுப்பாருக்கு (அதாவது மகமதியர், கிருஸ்தவர்களுக்கு) கொடுத்திருக்கும் வகுப்புவாரி உரிமையைத்தான் ஜஸ்டிஸ் கட்சி கேள்கிறது என்றும், இதற்குப்பார்ப்பனர்களே முட்டுக் கட்டையாயிருக்கிறார்கள் என்றும் நன்றாய் எடுத்துரைத்தார். இவைகளை நன்றாய் அறிந்தும் தெரிந்தும் மனப்பூர்வமாக தானும் ஒப்புக்கொண்டும், தனது வாக்காலேயே இன்னமும் என்ன என்னமோ பேசியும் ஆனபின் ஊர்போய்ச் சேர்ந்தவுடன் ஜஸ்டிஸ் கட்சி 'வகுப்புவாதக் கட்சி' அரசியல் கிளர்ச்சிக்கு இடையூறு செய்யக்கூடாது, என்கிற பழைய பல்லவியைப்பாடிக்கொண்டு இருப்பாரானால் இதற்கு நாம் என்ன சமாதானம் சொல்லக் கூடும். தேசீய அரசியல் கிளர்ச்சிக்கோ அல்லது காங்கிரஸ் அரசியல் கிளர்ச்சிக்கோ ஸ்ரீமான் முதலியார் போற்றும் மகாத்மாவின் அரசியல் கிளர்ச்சிக்கோ ஜஸ்டிஸ் கக்ஷி எந்த விதத்தில் மற்ற கட்சிகளைவிட இடையூறு செய்யக்கூடியதாயிருக்கிறது. இடையூறு செய்த கட்சிகளுக்கெல்லாம் தான் ஆக்கமளித்ததை அடியோடு மறந்துவிட்டு இப்படி பேசவும் எழுதவும் ஆரம்பித்துவிட்டால் நாம் என்ன செய்யலாம்- நம்முடைய கர்ம வித்தியாசம் என்றுதான் சொல்ல வேண்டும். இதுபோலவே ஸ்ரீமான் ஜோசப்பு போன்ற சில காங்கிரஸ்காரர்கள் என்பவர்களும் இதே பாடத்தைப் படிக்கிறார்கள். முன் எழுதியதுபோலவே பல பார்ப்பனர் அல்லாத பத்திரிகைகளும் அப்படியே

நடக்கிறார்கள். ஆகவே இக்கட்சிக்கு உள்ள கஷ்டம் "காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார்" களுக்குள்ளாகவே எவ்வளவு ஏற்படுகிறது என்பதும், இக்கட்சிக்காரர் பலர் காங்கிரஸ் அரசியல் வேஷம் போட்டுக் கொண்டதின் பயனாய் ஏற்படக்கூடிய கஷ்டம் எவ்வளவு என்பதும் நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. ஆகவே கோவை மகாநாட்டால் நமக்கு நன்மை ஏற்பட்டதா ? தீமை ஏற்பட்டதா ? என்பதை ஒருவாறு இதன் மூலம் ஊகித்துக்கொள்ளலாம். இது எப்படியோ இருக்கட்டும் இனிச்செய்யவேண்டியது என்ன ? தலைவர்கள் என்போர்களை நம்புவதில் பயனில்லை. பாமரமக்களுக்கு பகுத்தறிவு வரும்வரை தலைவர்கள் யோக்கியமாய் நடந்துகொள்வார்களென்று எண்ணுவது பைத்தியகாரத்தனமே ஆகும். எனவே நாம் இனி பாமரமக்களை கண்விழிக்கச்செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதுதான் உண்மையான தொண்டு. இதற்காகப்பிரயாசைப்பட போதிய பத்திரிகை இல்லை. ஆள்கள் இல்லை, பணமும் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நமது நாட்டில் உள்ள பத்திரிகைகள் ஆள்கள் பணம் ஆகியவை எல்லாம் போலிதேசியத்திற்கும், போலிசுயராஜ்யத்திற்கும் உபயோகப்படுத்தும் முறையில் வாழ்வும் கீர்த்தியும் அடையக் கூடியதாய் இருக்கிறதே ஒழிய உண்மைக்கு உதவக்கூடியதாக ஒன்றும் தென்படுவதில்லை. புதிதாக நமக்கு ஆள்களும் பத்திரிகை உதவிகளும் சேர்க்கத் தக்க காலம் இன்னும் வரவில்லையானாலும் இருப்பவைகளையாவது நழுவவிடாமல் வைத்திருக்கவேண்டியதா யிருக்கிறது. சுமார் நான்குமாதத்திற்குமுன் 'குடியரசில்' 'வேண்டுகோள்" என்னும் தலைப்பின் கீழ் திராவிடன் பத்திரிகையை ஒப்புக்கொள்ளலாமா என்பதைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதி இருந்ததும், அதற்கு 500 கனவான்கள்வரை பதில் எழுதியிருந்ததும் அவர்களுள் 20 கனவான்கள் தவிர மற்றவர்கள் ஒப்புக்கொள்ளும்படி எழுதியிருந்ததும், அதன்பேரில் சில நிபந்தனைகளின்படி யானால் ஒப்புக்கொள்ளக்கூடும் என்று தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தாருக்கு நாம் எழுதியிருப்பதாக எழுதியிருந்ததும், வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்நிபந்தனைகளுக்கு இப்போதுதான் பதில் வந்திருக்கிறது. நமது நிபந்தனைகளில் முக்கியமானது என்னவென்றால் 'குடியரசு' கொள்கைப்படிதான் 'திராவிடனையும்' நடத்த முடியும் என்றும், தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்தையோ ஜஸ்டிஸ் கட்சியையோ அதன் கொள்கைகளையோ அதில் சம்மந்தப்பட்ட தனிப்பட்ட நபர்களையோ கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கண்டிக்கத்தகுந்த உரிமை நமக்கு இருக்க வேண்டும் என்றும், எழுதி இருந்தோம். நாம் ஏன் அப்படி எழுத நேர்ந்தது என்றால் "தேசியம்" "சுயராஜ்யம்" என்கிற அரசியல் புரட்டுப்பதங்கள் அக்கட்சிக் கொள்கையிலும் கலந்திருப்பதால் அதன் மூலம் அக்கட்சியார்களும் காங்கிரஸ்காரர்களைப்போல் பாமரமக்களை ஏமாற்றும் வழியில் செல்ல நேரிட்டால் அம்மோசத்திலிருந்து பாமர மக்களை தப்புவிக்க யார் யாரை அல்லது எந்த எந்த கட்சியை கண்டிக்கவேண்டுமானாலும் கண்டிப்பதற்கு பாத்தியமிருக்கவும் மற்றும் சர்க்கார் அதின் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களை கண்டிக்கும விஷயத்தில் எவ்வித தடையும் இருக்கக்கூடாது என்பதற்காகவுமே அந்நிபந்தனை எழுதி இருந்தோம். அதற்கு பதில் எழுத ஏறக்குறைய 2 மாதத்திற்கு மேலாகி விட்டது

இப்போது பதில் வந்திருக்கிறது. அதாவது நம்மிஷ்டம் போல் நடத்த ஒப்புக்கொண்டதாகவும், காலவரையறை கட்டியும் ஒருதீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். ஆகஸ்டு முதல் தேதி முதலே ஒப்புக் கொள்ளும் படியாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அநேக நண்பர்கள் ஒப்புக் கொள்ளும்படியும் எழுதியிருக்கிறார்கள். இரண்டொரு கனவான்கள் மாதம் ஒன்றுக்கு 100, 200 ரூபாய் வீதம் நஷ்டத்திற்கு உதவுவதாகவும் வாக்களிக்கிறார்கள். சில நண்பர்கள் ஊதியம் எதிர்பாராமல் தொண்டு செய்வதாகவும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே இந்நிலையில் சிறிது காலத்திற்காவது நாமும் அதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதாகவே கருதுகிறோம்.

ஆனால் முக்கிய நண்பர்களில் பலர் உடல் நிலையைகவனிக்கும்படிக்கும், ஓய்வெடுத்துக்கொள்ளுக்கும்படிக்கும் எழுதிவருகிறார்கள்

ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய சமயம் நமக்குத் தெரியும். அதாவது நமது தொண்டு நாட்டிற்கு உதவாது என்றாவது நமது தொண்டை நாட்டார் ஏற்பதில்லை என்றாவது நமக்கு தெரிந்தால் யாரிடமும் சொல்லாமல் நாமே ஓய்வெடுத்துக்கொள்ளுவோம்.

அது வரை எடுத்துக்கொள்ளும் ஓய்வு உண்மையான ஓய்வாகாது. அப்படி கடுமையாக ஓய்வு எடுத்துக கொண்டுதான் ஆக வேண்டும் என்கிற முறையில் நமது உடலில் கோளாறு ஒன்றும் இது சமயம் இல்லை யென்றே நினைக்கிறோம்.

தனவைசிய நாட்டு சுற்றுப்பிரயாணம் முடிந்தவுடன் ஒரு வாரத்தில் "திராவிடன்" சம்மந்தமான ஏற்பாடுகளைப்பற்றி முடிவு செய்யசென்னைக்குச் செல்லவேண்டி இருக்கும். இவ்விஷயத்தில் நண்பர்கள் தங்கள் தங்கள் கடமையைச் செய்யதவறமாட்டார்கள் என்றே முடிவு செய்து கொண்டு இம்முயற்சியில் ஈடுபடலாமெனக்கருதுகிறோம்.

---

## மந்திரிகளின் நிலை.

---

கோவை மகா நாட்டில் இரட்டை ஆட்சி யழியும் வரை மந்திரி முதலிய உத்தியோகம் ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்கிற தீர்மானம் செய்யப்பட்டவுடன் காங்கிரஸ் காரர்கள் என்பவர்களின் நிலை கொஞ்சம் கஷ்டமாகி விட்டது. எதனாலென்றால் மதுரை மகா நாட்டிலேயே "இந்த சட்ட சபை உள்ளவரை மந்திரி பதவி ஒப்புக் கொள்ளுவதில்லை" என்று தீர்மானித்திருந்தும் காங்கிரஸ் காரர்கள் மந்திரிகளை ஆதரித்து வந்தார்கள். அதற்கு உண்மையான காரணம் இந்த மந்திரி சபையை ஆதரிப்பதின் மூலம் பார்ப்பனரல்லாதார்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி மந்திரிகளால் சென்ற 6 வருடகாலமாய் ஏற்பட்ட நன்மைகளையும், முற்போக்குகளையும் ஒழித்து பழையபடியே அரசாங்க பதவிகளையும், மற்றுமுள்ள ஸ்தாபனங்களையும், பார்ப்பன அக்கிராரத்திற்கே சுவாதீனமாக்கிக்கொள்ளலாம் என்கிற எண்ணத்தின்மேல் அதை ஆதரித்து வந்ததோடல்லாமல்" "ஜஸ்டிஸ் கட்சியார் இந்த கவுன்சிலில் மந்திரி உத்தியோகம் பெற்றுக்கொள்ளாவிட்டாலும் அடுத்த கவுன்சிலிலாவது உத்தியோகம் பெற்றுக் கொள்ளுவார்களாதலால் நாங்கள் தற்கால மந்திரிகளை ஆதரிக்கிறோம்" என்று (ஓநாய் ஆட்டுக்குட்டி கதை போல்) சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்படிச்சொல்லுவதன் மூலம் இன்னும் ஒரு கவுன்சில் தேர்தல் நடக்குமானால் அதில் தாங்கள் வெற்றி பெற முடியாதென்று உறுதி கொண்டதையும், தங்களது மோசங்களையும் அயோக்கியத்தனங்களையும் பாமர மக்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதையும், பார்ப்பனரல்லாதார் கட்சியின் உண்மைத்தத்துவத்தையும் பாமர மக்கள் அறியும்படி ஏற்பட்டு விட்டதென்பதையும் தாங்களே ஒப்புக்கொண்டதுபோல் ஆகிறதென்பதைக்கூட கவனியாமலும், காங்கிரஸ் திட்டத்திற்கு விரோதமாய் நடந்தாலும் காங்கிரஸின் மூலமே தங்களது நடவடிக்கையை காங்கிரசே சரி என்று ஒப்புக் கொள்ளச் செய்து விடலாம் என்று எண்ணி அப்படியே செய்து விட்டதின் மூலம் காங்கிரஸ்பார்ப்பன சூழ்ச்சி ஸ்தாபனமென்று ஜனங்கள் நினைப்பது சரிஎன்று ஏற்பட்டாலும் தங்களுக்கு அதைப்பற்றி பயமில்லை என்று நினைத்திருப்பதை காட்டிக்கொள்வதாகிறது என்பதையும், கவனிக்காமலும் தங்கள் காரியத்தை சாதித்துக் கொண்டு வந்தார்கள். இப்போது அந்த சமாதானத்தை சொல்லி பாமர மக்களை ஏமாற்றுவதற்கில்லாமலும் இனி ஒரு தேர்தல் நடக்கக்கூட இடமில்லாமல் அதாவது இரட்டை ஆட்சி மாறுகிற வரை உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதில்லை என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிவிட்டு இனி இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்கிற பார்ப்பனர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றறிய பார்ப்பனரல்லாத கட்சியை சேர்ந்த ஒரு சட்டசபை அங்கத்தினர் மந்திரிகளின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டு வந்தவுடன்பார்ப்பனர்களுக்கு நிலைமை கஷ்டமாகி விட்டது. இதன் பேரில் பழையபடி பாமர மக்களை ஏமாற்றுவதற்கு என்றே தாங்களும் ஒரு நம்பிக்கை இல்லாத தீர்மானம்கொண்டு வருவது போல் பாசாங்கு செய்ய உத்தேசித்து அவர்களும் ஒரு நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டு வரப் போவதாக வெளியிட்டிருக்கிறார்கள். என்றாலும்,

இது மந்திரிகளைக் கலந்து யோசனை செய்த பிறகுதான் அதாவது மந்திரிகளுக்கு தைரியம் சொல்லி விட்டு இத்தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஏனென்றால் மந்திரிகளிடம் அவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்து மாதம் 1க்கு 400, 500 வாங்கிக் கொண்டு அவர்களை காப்பாற்றிவரும் காங்கிரஸ் பார்ப்பனர்களை யாவரும் தெரிந்திருக்கக்கூடும். இப்பொழுது திடீரென்று நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்து அவர்களை ஒழிப்பதானால் மாதம் 400, 500 கிடைக்குமா? தவிர ஸ்தல ஸ்தாபனங்களிலும் இந்த மந்திரிகளை மிரட்டி பார்ப்பனர்களுக்கும் அவர்களது அடிமைகளுக்கும் உத்தியோகம் செய்து வைப்பதாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்ளமுடியுமா? இனியாருக்காவது செய்து வைப்பதாக வியாபாரம் பேசமுடியுமா? இந்த மந்திரிகளின் அதிகாரம் ஒழிந்து பார்ப்பனரல்லாத கட்சி மந்திரிகளுக்கு போகாமல் வெள்ளைக்காரருக்கு இந்த அதிகாரம் போவதாயிருந்தாலும் கூட இப்போதைய மந்திரிகளால் தங்களுக்கு நடக்கும் சவுகரியத்தில் பத்தில் ஒரு பங்காவது செய்து கொள்ள முடியுமா? என்பவைகளை யோசித்துப்பார்த்ததில் முடியாது என்பதாக அறிந்து வேஷத்திற்காக கொண்டுவந்திருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

இதன் முடிவை இப்போதே சொல்லி விடலாம். ஆதாவது இந்த தீர்மானம் சட்டசபைக்கு வரும் என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் காரர்கள் என்போர்கள் சிலர் "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்பது போல் வெகு உக்கிரமாக மந்திரிகளை வைவது போல் ஜனங்கள் நினைக்கும்படி சர்க்காரைத் தாக்கி பேசவும் பேசுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. கடைசியாக ஓட்டு எடுக்கும்போது இத்தீர்மானம் தோற்றுப்போகும்படி செய்துவிட்டு மந்திரிகளிடம் இரட்டைக்கூலி வாங்கிக் கொள்ளக்கூடும். இதுதான் அநேகமாய் முடியப் போகிறது. எப்படி எனில்; இப்போது உள்ள சட்டசபை மெம்பர்கள் மொத்தம் 128 இருக்கலாம். இதில் சுயராஜ்ஜியக் கக்ஷியார் 42 ஜஸ்டிஸ் கக்ஷியார் 22. சுயேச்சை எதிர்ப்புக் கட்சியார் 4 பேர். ஆகஒட்டுமொத்தம் எதிர்ப்புக்காரர்கள் சுமார் 68 பேர்கள் இருக்கலாம். போனால் மீதி சுமார் 60 பேர் மந்திரியை ஆதரிக்கிறவர்களாக இருக்கக்கூடும். எதிர்ப்புக்கு அதிகமாயுள்ள எண்ணிக்கை 8 தான் ஏற்படுகிறது. இந்த எட்டுப்பேர்களுக்கும் அத்தீர்மானத்தன்று "காயலாவாகவும்" "வேறு ஊருக்குப்போகவும்" அவர்கள் வீட்டில் எதாவது ஒரு 'பாட்டி சாகவும்' "பாட்டனுக்கு தீதிவரவும்" "வேறு அவசரமான காரியம்" ஏற்படவும் "ரயில் தப்பிப்போகவும்" வேண்டிய முயற்சிகள் இப்போது இருந்தே நடைபெற்றுவருகிறது. இந்த வேலையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, எ. ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் முதலியவர்கள் வெகு தீவிரமாய் இருக்கிறார்கள் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியின் உதவி கூட வேண்டப்படுகிறது. ஸ்ரீமான் சர், சி. பி. அய்யர் அவர்களின் செல்வாக்கு சக ... ந்துகளெல்லாம் உலாவுகிறது. முனிசிபு வேலைமுதலானவைகள் கூடமாற்றுப்பண்டங்களாக விலை கூறப்படுகிறது. இவைகள் ஒருபுறமிருக்க மந்திரிமார்களின் பிரயத்தனங்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமா? அவை ஆகாயத்திற்கும் பூமிக்கும் தாண்டவமாடுகிறது. மந்திரிகள் ஊர் ஊராய் பிரசாரம் செய்யப்போவதாய் சொல்லியிருப்பதே இதுதான் என்பது யாவருக்கும் முன்னமேயே விளங்கி விட்டது. ஸ்ரீமான் சுப்பராய மந்திரி இலாகா ஸ்தலஸ்தாபன நியமனங்கள் முதலியவை சட்டசபை அங்கத்தினர்கள் மீட்டிங்குக்கு வராமல் இருப்பதற்கு மாற்றுப்பண்டங்களாக ஏலம் கூறப்படுகிறது. அங்கத்தினர்களின் சுற்றத்தாருக்கு உத்தியோக சிபார்சுகள் பறக்கிறது. மற்ற மந்திரிகளின் முயற்சிகளும் பண்டமாற்றுகளும் அதுபோலவே வர்ஜ்ஜா வர்ஜ்ஜம் பாத்திரம் அபாத்திரம் என்கிற பேச்சில்லாமல் தாண்டவமாடுகிறது இவ்வளவுக்கும் மேலாக பார்ப்பனர்களுக்கு வேண்டிய வெள்ளைக்கார அதிகாரிகளின் மிரட்டல்களும் சிபார்சுகளும் ஒருபுறம் ஊடுருவிப்பாய்ந்து கொண்டிருக்கின்றன.

இவைகள் தவிர, யாராவது ஒரு மந்திரி ராஜிநாமா கொடுத்து வேறு ஒரு கோயமுத்தூர் கனவானுக்கு மந்திரிவேலை செய்துவைப்பதாகவும் அக் கனவான் சட்டசபை மெம்பராவதற்காக இப்போதிருக்கும் ஒரு சட்டசபை மெம்பரை ராஜினாமா கொடுக்கும்படியும் ஏற்பாடுகள் நடப்பதாகவும், அந்த கனவான் முழுப்பிரயத்தனத்துடன் மந்திரிகளின்மேல் வரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடிக்க வேலை செய்வதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இத்தனை தந்திரங்களையும் தப்பி நம்பிக்கை இல்லை தீர்மானம் நிறைவேறும் என்பதும் இம்மந்திரிகள் போய்விடுவார்கள் என்பதும் சுலபமாய் முடிவுகட்டக்கூடிய காரியமல்ல என்பதே நமது அபிப்பிராயம். அப்படித்தான் அவர்கள் போய்விடுவதாலேயே பார்ப்பனர்கள் ஆதிக்கம் குறையுமென்று சொல்லிவிடவும் முடியாது. அதற்கு தகுந்தவர்களைப் பிடித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே பாடுபட்டு வெற்றியடைய பார்ப்பார்கள்.

---

## திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் ஆடி மாதம் 1 தேதி முதல் ஒரு வாரம் தனவைசியநாட்டில் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி குறிப்பு

ஆடி மாதம் 1 தேதி மாலை காரைக்குடி, 2 தேதி மாலை சிவகங்கை, 3 தேதி மாலை தேவகோட்டை. 4 உ காலை புதுவயல், மாலை பள்ளத்தூர். 5 தேதி காலை சிறுவயல், மாலை திருப்புத்தூர், 6 தேதி மாலை நெய்க்குப்பை, 7 காலை தென்னிந்திய, லஉரிமைச் சங்க ஸ்தாபனம், மாலை அமராவதி புதூர்,

திருவாளருடன் பிச்சப்பா, சுப்பிரமணியன்; தே. வே அருணாசலச் செட்டியார், செ. முருகப்ப செட்டியார், ஆ. வி. லெ. அருணாசலச் செட்டியார், முதலியோருடன் சுற்றுப் பிரயாணஞ் செய்வார்,

(குமரன்)

---

7ம் பக்க தொடர்ச்சி

எங்கள் கையில் கொடுத்தாலொழிய காந்தி அடிகள் அங்குவரச் சம்மதியோம். இன்றேல், உங்கள் பணமும் வேண்டியதில்லை" என்றார். "அப்படியானால், சங்கராச்சாரியரைப் போலல்லவோ, காந்தி அடிகளையும் ஆக்கிவிட்டீர்கள். எந்த ஊரில் நூல் நூற்பது குறைந்திருக்கிறதோ, எங்கு அதை புதிதாய்ப் பரவச்செய்யவேண்டுமோ, அங்கல்லவோ அடிகள் போய் மக்களை ஊக்கப்படுத்தவேண்டும். அதைவிட்டு பணத்திற்குப் பாடுபடுவது முறையோ?" என்ற வினாக்களுக்கு விடை பின் வருமாறு. "பணம் எங்கு அதிகமாய்க் கிடைக்கிறதோ அந்த ஊருக்குத்தான் அடிகளைக் கூட்டிக்கொண்டு போகப் போகிறோம். ஆம பணத்திற்காகவே இப்பொழுது காந்தி அடிகள் வருகிறார். கதரைப் பரவச் செய்வதற்கல்ல." இம்மாற்றங் கேட்டம் பெரியார், "அதிருக்கட்டும், மூன்று ஆண்டுகளுக்கு முன் திருச்சிறுப்பள்ளியில் கூடிய தமிழ்நாட்டுக் கூட்டத்தில் "சேர்மா தேவி குருகுல" போராட்டப் பேச்சு நடந்த சமயம், தாங்களும் மற்றப் பார்ப்பனர்களும், ஏன் தமிழ் நாட்டுக் கூட்டத்தினின்றும் விலகினீர்கள்", என்றிடித்ததற்கு, "வரதராசலு நாயுடு ஆட்சியின் கீழிருக்க எங்களுக்குச் சம்மதமில்லை" என்றனர் ஆச்சாரியார்.

தமிழ் நண்பர்களே! தூக்கத்தினின்றும் எழுங்கள். கதர் கதர் என்று நுனிநாக்கினால் சொல்லித் திரியும் பார்ப்பனர்களையும், அவர்கள் வால்களைப் பிடித்துத் திரியும், நம்மவர்களையும் நம்பாதீர்கள. முற்றத் துறந்த முனிவராகிய காந்தி அடிகளின் பெயரைக் கூவிக்கொண்டு காசுபறிக்க அலையும் வன்நெஞ்சர், வஞ்சகர் வலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள். ஈரோட்டிலிருக்கும் "எல்லா இந்திய நூல்நூற்கும் சங்கம்" படும்பாடு தெரியுமா. பணமெல்லாம் பார்ப்பனர் அல்லாதாருடையது. அதில் வேலைக்கு அமர்ந்திருப்பவர்களெல்லாம் பார்ப்பனர். அவர்கள் செய்யும் வேலையோ, எந்தெந்த வழிகளில் தங்கள் இனத்தவர்களின் உரிமைகளை உயர்த்த முடியவேண்டுமோ அவைகளில் அணுவும் குறையாமல் முயன்றுவருகிறார்கள். பெயரளவில், சாதுக்களைப்போன்ற ஒரு சில பார்ப்பனரல்லாதாரையும், தங்களுக்குத் "ததாஸ்து" (அப்படியேயாகுக) சொல்வதற்கு உடன் கூட்டிச் செல்கிறார்கள்.

கதரைக் கண்டால் கதறி காதம் ஓடும் "பெரியோர்கள்" காந்தி அடிகளை வரவேற்கும் கூட்டங்களில் அங்கத்தினர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். காந்தி அடிகளைக் காணப்போகும்போதும், பொதுக்கூட்டங்களுக்குப் போகும்போதும், கதர் ஆடையால் அலங்கரித்துக்கொண்டுவரும் "தேசாபிமானி"களா, ஏழைகள் இன்புறுமாறு சுயராச்சியத்தைக் கொண்டுவரப்போகிறார்கள். தங்கள் சொந்த ஆட்சியைத்தான் நிலைநாட்ட முயலுவார்கள். மோசம்போகாதீர்கள். சொன்னேன்! சொன்னேன்!! சொன்னேன்!!! குலசேகரபட்டணம்.

---

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒருக்கால் தீர்மானத்தை யாராவது எதிர்த்திருந்தாலும் அதற்கும் தயாராய் காங்கிரஸ்பிரவேச அனுமதித்தீர்மானம் நிறைவேற்றுவதற்கு மெஜாரிட்டி சேர்த்துக் கொண்டும் ஒருவாறாகமைய், மகா நாட்டு வேலையைத் தவிர வேறு ஒருவேலையையும் கவனிக்காமல் வேலைசெய்ததானது மகா நாட்டுக்கு எவ்வளவோ உதவியாயிருந்தது. அவரது தகப்பனர் ஸ்ரீமான் பி. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மகா நாட்டுக்கு வரசௌகரியப்படாவிட்டாலும் ஒவ்வொரு விஷயமும் ஒழுங்காய் நடைபெறவேண்டும் என்று எடுத்துக்கொண்ட கவலையும் முயற்சியும் மிகவும் குறிப்பிடத்தக்கது. மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான் வி. அருணசலம் செட்டியார் அவர்கள் பிரபல வியாபாரியும் முனிசிபல் வைஸ் சேர்மெனுமாவார். அவர்தாமும் தனது சகோதரர்களும் பணவிருந்துக்கு ஊர் ஊராய் திரிந்ததல்லாமல் தங்களது வீடு கடை மற்ற கட்டடம் முதலியவைகளையும் ஒழித்துக்கொடுத்து கடிதப் போக்குவரத்து, மகா நாட்டுக் காரியாலயப் பொறுப்பு, அச்சுவிஷயம், மற்றும் சகல காரியங்களையும் அவர் குடும்பமே மேற்போட்டுக்கொண்டு செய்தது. மற்றொரு காரியதரிசியான ஸ்ரீமான் செட்டிபாளையம் நஞ்சப்ப கவுண்டர் ஒரு பெரிய மிராசுதாரரும் கோயமுத்தூர் ஜில்லா போர்ட் வைஸ் பிரசிடெண்டுமாவார். இவர் எடுத்துக் கொண்ட பொறுப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கது. பாத்திரம் வகைகள் சேகரிப்பதும் சமையல் ஒழுங்குகளை கவனிப்பதுமான வேலைகளை மிகுதியும் கவனித்து வந்தார். மற்றொரு காரியதரிசி ஸ்ரீமான் நஞ்சுண்ட கவடர் அவர்கள் முனிசிபல் கவுன்சிலரும் பாங்கரும் ஆவர். இவரும் மகா நாட்டுப் பிரதிநிதிகளை ஜாகை ஜாகையாய் கவனிப்பதும் புகார்கள் இல்லாமல் வேலை நடக்கத் தக்கமாதிரியமாய் ஆங்காங்குமேற்பார்வைகு பார்த்ததும் மிகவும் குறிப்பிடத்தக்கது. கோவைத் தலைவர் ஸ்ரீமான் வேரிவாட செட்டியார் அவர்களும் ஒவ்வொரு காரியத்தையும் மேற்பார்வைபார்த்து வந்தார்கள். ஸ்ரீமான்கள் ! பரமேஸ்வரம் செட்டியார், பீமைய செட்டியார், பழனிசாமி நாயுடு, சி. வி. சுப்ப செட்டியார், செங்கோட்டைய்யா கிருஷ்ணசாமி பிள்ளை முதலிய அனேக வரவேற்புக் கமிட்டி கனவான்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மகா நாட்டு வெற்றிக்கு ஜீவாதாரமானது என்றே சொல்லவேண்டும். என்றும் சொல்லி முடித்துவிட்டு மகாநாடு தொண்டர் தலைவர் ஸ்ரீமான் பொன்னைய கவுடர் அவர்களைப்பற்றியும் சொல்லும் போது அவர் ஒரு பெரிய செல்வவந்தரென்றும், மிகப்பொறுமையுள்ளவரென்றும், தனது புன்னகையாலேயே எல்லாக்காரியத்தையும் சாதிக்கக்கூடியவர் என்றும் அவரே கேட்டனுப்பில்லாதவரை வாலண்டியர்கள் இவ்வளவு சந்தோஷமாகவும் குதூகலத்துடனும் வேலைசெய்திருக்கமாட்டார்கள் என்றும்சொல்லிவிட்டு மகாநாட்டுக்கு கோளாய் கொட்டகை உதவிய ஸ்ரீமான் வின்செண்டு துரை அவர்களுக்கு நன்றிசெலுத்தும் போது ஸ்ரீமான் நாயக்கர் சொன்னதாவது.

இந்த மகா நாட்டுக்கு உதவி செய்தவர்களில் பேருதவி செய்தவர்கள் இந்தக் கொட்டகை உதவின ஸ்ரீமான் வின்செண்டு துரையே ஆகும் என்றும், இந்த கொட்டகையை மகா நாட்டுக்காக கேள்ப்பதற்கு தாமும் ஸ்ரீமான் ரத்தின சபாபதி முதலியாரும் போய் கேட்டதும் யாதொரு பதிலும் சொல்லாமல் உடனே ஒப்புக்கொண்டார் என்றும், ஆனால் நாம் கேள்ப்பதற்கு முன் ஒலேயே ஒரு நாடகக்கம்பெனியாருக்கு தருவதாய் பேசி இருந்தும் அக்கம்பெனியாரும் இந்த தேதிகளில் நாடகம் நடத்துவதாய் சுவர் விளம்பரங்கள் ஒட்டி இருந்தும அவர்களுக்கு சமாதானம் சொல்லிக்கொள்ளலாம் என்கிற தைரியத்தின் மேல் கொடுத்ததாகவும், கொட்டகை கொடுத்ததோடல்லாமல் நம்மிஷ்டப்படியெல்லாம் இதன் இணைப்புகளை மாற்றிக் கொள்ள சம்மதித்ததோடு கொட்டகை அலங்காரமுழுதும் அவர்களே செய்துகொடுத்து வின்செண்ட்துரை சகோதரர்கள் இருவரும் தொண்டர்கள் போலவே வேண்டிய உதவி செய்தார்கள் என்றும், இந்த கொட்டகை கிடைக்காவிட்டால் 500 ரூ. செலவழித்தாலும் இவ்வளவு சவுகரியம்கிடைக்காதென்றும், அதுமாத்திரமல்லாமல் மகாநாடு உபசரணைத் தலைவர் வாலிபசங்க உபசரணை தலைவர் முதலியவர்கள் பிரசங்கங்களும் சுவர் விளம்பரம் துண்டு விளம்பரம் மகாநாட்டு நடவடிக்கைகள் முதலிய பலவித அச்சு வேலைகளையும் இரவும் பகலாய் கஷ்டப்பட்டு உடனுக்குடன் செய்து கொடுத்தார்கள் என்றும், அவர்களது அன்பான வார்த்தைகளும் அவசரத்திற்கேற்றபடிநடந்து கொண்ட உதவியும் மிகவும் மதிக்கத்தக்கது என்றும் பேசினர். பிறகு பெருத்த கைதட்டலும் ஆரவாரத்திற்கும் இடையில் தலைவர் ஸ்ரீமான் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் எழுந்து முடிவுரை நிகழ்த்தியதாவது-

## தலைவர் முடிவுரை.

உங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் வார்த்தையால் சொல்லி முடியாது. நீங்கள் எல்லோரும் எனக்குக்கொடுத்த ஒரு பதவிக்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். இந்த விசேஷ மகாநாட்டின் பலனுக்கு எங்கு ஏதா பிளவு நேர்ந்துவிடுமோ என்று நினைத்தேன். ஆனால் அவ்வாறு நடைபெறுததைக் குறித்து மிகவும் சந்தோஷிக்கிறேன். இதை விசேஷ மகாநாடு என்று கூறுவதற்கு விசேஷ தீர்மானம் ஒன்றை நீங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். காங்கிரசில் சேரக்கூடாது என்ற தீர்மானத்தோடு வந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கைதான் அதிகமாய் இருந்தது. காங்கிரசில் சேர்ந்து விடுவோமாகில் இந்த இயக்கத்திற்கே கேடு வரும் என்று சிலர் நினைத்தார்கள் என்றாலும் ஒன்றுபட்டுசரிவர தீர்மானங்கள் நிறைவேற உங்கள் மன உறுதியே காரணம் என்று கூறவேண்டும். நம்மிடம் ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டால் நாம் முன்னேற்றமடைய முடியாது நம்மில் சிலர் காங்கிரசில் சேருவது என்று தீர்மானிப்பதால் நமது இயக்கம் கெடாது என்ற விஷயம் நன்றாக யோசிக்கப்பட்ட பின்தான் நாம் அத்தீர்மானத்தை நிறைவேற்றத் தீர்மானித்தோம். பிறகு ஏகோபித்த அபிப்பிராயம் ஏற்பட்டது.

முதல் நாள் எல்லோரும் சற்று பயந்தார்கள். ஆவேசத்துடன் சிலர் இருந்தார்கள். ஆனால் எனக்கும் நமது அமைச்சருக்கும் அந்த பயமும்கிடையாது. சந்தேகமுமில்லை. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறுது மெஜாரடியாக நிறைவேறும் என்று தோன்றியிருந்தால் கூட இந்தீர்மானத்தைக்கொண்டுவர அனுமதித்திருக்கமாட்டேன். (கேளுங்கள், கேளுங்கள்) நமது இயக்கமானது வளர்ந்து முன்னேற்றமடைய சிலர் காங்கிரசில் சேருவதும் ஓர் நல்ல உபாயந்தான் என்ற எண்ணம் எனக்கும் மற்ற தலைவர்களுக்கும் ஏற்பட்டது. இந்த மகாநாடு விசேஷமான தென்பதைக் கூற நமது அரசரை ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் எம் தலைவர் என்று கூறியது போதாதா? அவ்வாறு மூன்று பேர்களும் சொன்னதிலிருந்தே இந்த மகாநாடு மிகவும் முக்கியமானதென்பதைக் கூறவும வேண்டுமா? அவர்கள் உண்மையான தலைவரை, வந்தடைந்ததற்கு மிக்க வந்தனம். நம் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லா பிராமணரல்லாதாரும் க்ஷேமமடையவேண்டும். இம் மகாநாட்டை நாம மறக்க முடியாது. இவ்வளவிற் நம காரணமாயிருந்த வரவேற்புக் கமிட்டியாருக்கு மிக்க வந்தனம். நாம் இந்த மகாநாட்டில் செய்த தீர்மானங்களுடனேயே நின்றுவிடக்கூடாது. நாம் எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாய் இருக்கவேண்டும் நீங்கள் கூறியபடி என்னிடம் விசேஷமாக போற்றல் ஒன்றுமில்லை. ஒற்றுமை ஏற்படுத்திவிட்டேன் என்று கூறுபவனல்லன். ஓர் பார்ப்பன பத்திரிகை, நான் இந்த மகாநட்டிற்கு தலைமைவகிக்கத் தகுதியுள்ளவனல்லஎன்றுநேற்றுகூறி இருக்கிறது. (வெட்கம் என்ற கூக்குரல் அப்பத்திரிகையை உடனே பகிஷ்காரம் செய்யவேண்டும் என்ற ஆரவாரம்) நீங்கள் பகிஷ்கரிப்பதைப்பற்றி நான் ஒன்றும கூறப் போவதில்லை. என்னைப்பற்றி ஓர் தலையங்கம் எழுதி நான் தகுதியுடையவன் அல்ல என்று கூறியதே—நான் இந்த ஸ்தானத்திற்கு தகுதியுள்ளவனாய் இருக்கலாமென்று நம்புகிறேன். இப்போது நண்பர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். இவ்வளவோடு நம வேலை முடிந்துவிட்டது என்றுநீங்கள் நினைத்துக்கொள்ளக்கூடாது. நாம் செய்யவேண்டிய கடமை இப்பொழுது தான் ஆரம்பித்திருக்கிறது என்று நீங்கள் ஒவ்வொருவரும் நினைத்துக்கொள்ளுதல் வேண்டும். நாம் நமது இலட்சியங்களில் பூர்ண வெற்றியடையும வரையில் இதே நோக்கத்துடன் செல்லுதல்வேண்டும். கிராமந்தோறும் பிரசாரம் செய்யும் வேலையை நம் ஆரம்பிக்க வேண்டும். பார்ப்பனர்களது சூழ்ச்சியில் அகப்படுபவர்கள் அரசியல் விஷயங்களை அறியாதவர்கள் தான். நாம் நமது அரசியல் சமுதாய விவகாரங்களைப் பற்றி கிராம வாசிகளுக்குக் கூறுதல் வேண்டும். அவ்வாறு செய்ய முற்பட்டால் கூடிய சீக்கிரத்தில் நமக்கு வெற்றி கிடைக்கும் என்பதிற் சிறிதும ஆட்சேபனை இல்லை.

## கோவைமகாநாட்டு முடிவைப்பற்றி மதுரையில் கொண்டாட்டம்.

### ஸ்ரீமான் M. T. சுப்பிரமணிய முதலியாரின் உண்மை வாக்கு.

மதுரை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் ஆதரவில் கடை வீதி அந்திக்கடை மைதானத்தில் ஒரு பெருத்த கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள் ஜோசப்பு, சுந்தரம் பிள்ளை முதலிய காங்கிரஸ் காரர்கள் என்போர்களும் மற்றும் அநேகரும் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் நாராயணசாமி பிள்ளை அக்கிராசனம் வகிக்க உத்தமபாளையம் ஸ்ரீமான் M. D. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஒ உபன்னியாசம் செய்தார். அதன் சாராம்சமாவது:—

பார்ப்பனர்களின் தந்திரத்தையும் கொடுமையையும் நன்றாய் உணர்ந்தே பார்ப்பனரல்லாத மக்களை அதிலிருந்து தப்புவிப்பதற்காகவே டாக்டர் நாயரும், சர். தியாகராயரும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை தோற்றுவித்தார்கள். அரசியல் பார்ப்பனர்களை நம்பக்கூடாது என்று சர். தியாகராயர் எல்லோருக்கும் உபதேசம் செய்தார். நாம் இப்போது எந்தப்பார்ப்பனரையும் நம்புவதற்கில்லாமல் இருக்கிறது. நமது நாட்டையும் நம்மையும் அடிமைப்படுத்தினவர்கள் பார்ப்பனர்களே ஆவார்கள். வடநாட்டிலிருந்து நமது நாட்டுக்கு எப்பொழுது ஆரியர் என்னும் பார்ப்பனர்கள் வந்தார்களோ அன்றே நமது நாட்டிற்குள் அடிமைத்தனம் நுழைந்து விட்டது. பிரிட்டிஷ் ராஜாங்கம் நம்மை அடிமைப் படுத்தின கொடுமையை விட பார்ப்பனர் நம்மை அடிமைப்படுத்தி இருக்கும் கொடுமையே மிகவும் கடினமானது. பார்ப்பனர்களின் கொடுமைக்கும் சூழ்ச்சிக்கும் எத்தனையோ ஆதாரங்கள் நம் முன் தினமும் காணப்படுகின்றன. சங்கராச்சாரியார் என்கிற ஒரு பார்ப்பன சந்நியாசி இவ்வூருக்கு வந்தபொழுது அவருடைய பரிவாரம், யானை, குதிரை, ஒட்டகம் முதலியவைகள் எல்லாம் கோவிலுக்குள்ளாகவே கட்டப்பட்டு இருந்ததோடு அவைகளை கவனிக்க ஜாதி வித்தியாசமில்லாமல் சகலரையும் உள்ளே போக அனுமதித்தார்கள். அவர் ஊரை விட்டுப் போய் விட்டவுடன் அதே ஜாதியாரை மறுபடியும் கோவிலுக்குள் போக அனுமதிப்பதில்லை. அவர்களுக்கு வேண்டியபோது ஒரு சட்டம் வேண்டாத போது ஒரு சட்டமாயிருக்கிறது. ஏனென்றால் சென்னை அரசாங்க சட்டமெம்பர் என்பவரே அந்த ஜாதியைச் சேர்ந்தவரானதினால் அவரிஷ்டப்படி சட்டம் செய்ய இடமிருக்கிறது. சுவாமிக்கென்று நாம் கொடுக்கும் பணங்கள் பார்ப்பனரைத்தவிர வேறு யாருக்கும் உபயோகப்படக்கூடாது என்கிறார்கள். திருப்பதி ராமேஸ்வரம் முதலிய தேவஸ்தானங்கள் பணத்தை அள்ளி அவர்களுடைய பாஷையாகிய சமஸ்கிருத பாஷைக்கே பள்ளிக்கூடங்கள் வைத்து அவர்களே சாப்பிடவும் அவர்களே படிக்கவும் வெகுகாலமாய் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்வகுப்பைச் சேர்ந்தவர்களை சேர்த்துக்கொள்ளுவதில்லை என்று தைரியமாய் சொல்லி வருகிறார்கள். இதை யாராவது கேட்டால் வகுப்புத்துவேஷமென்று சொல்லுகிறார்கள். சகல தர்ம சொத்துக்களையும் பார்ப்பனர்களே அனுபவிக்க வேண்டுமென்கிறார்கள். இதைப்பற்றி யாரும் பேசக்கூடாது என்று சட்டம் செய்கிறார்கள். இந்த கொடுமைகளை ஒழிக்கத்தான் கோவை மகாநாடு போன்றவைகள் அடிக்கடி கூட்ட வேண்டி இருக்கிறது அதற்காகவே தான் பார்ப்பனரல்லாத மக்களும் கும்பல் கும்பலாய் வருகிறார்கள். அதற்கு ஏற்ற தீர்மானங்களையும் ஏகமனதாய் செய்து வருகிறார்கள். அவைகளை அமுலுக்குக் கொண்டு வரவேண்டியது நமது கடமையாகும். இந்த வேலைகளைச் செய்வதை விட்டுவிட்டு காங்கிரசில் சேருவது என்பது எனக்கு கொஞ்சமும் இஷ்டமில்லை காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கொள்கைக்கும் வித்தியாசமே இல்லை. ஆனால் காங்கிரஸ் நடைமுறைகள் நாணயமானதல்ல. கொள்கை ஒன்று. நடவடிக்கை ஒன்று பேச்சு ஒன்று. காங்கிரசில் மகமதியருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் சில வகுப்புக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுத்து இருக்கிறது. அக்கொள்கையே ஒப்புக்கொண்டுமிருக்கிறது. நாம் கேட்டால் மாத்திரம் வகுப்பு துவேஷம் என்கிறார்கள். ஏனென்றால் அது ஒரு வகுப்பாருக்கே ஏகபோக உரிமையாகி விட்டதால் அப்படிச் சொல்ல இடமேற்பட்டு விட்டது. அதனாலேயே அவர்கள் நாடெல்லாம் சுற்றித் திரிந்து கொண்டு வயிறு வளர்ப்பதுமல்லாமல் நம்மை தேசத்துரோகிகள் என்றும் விஷமப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அது பொய் என்பதை காட்டவும் பார்ப்பனர்கள் காங்கிரசின் பேரால் நமக்கும் தேசத்திற்கும் செய்யும் அக்கிரமங்களையும் தடுப்பதற்குமாகவேண்டுமானால் காங்கிரசைக் கைப்பற்ற வேண்டுமென்பதைப் பற்றி நான் ஆக்ஷேபிப்பதில்லை என்பதாக பேசியபின் சோழவந்தான் தேசபக்தர் ஸ்ரீமான் சுப்பிரமணியம் பிள்ளையும், ஸ்ரீமான் அருணாசலமும் இதை ஆதரித்து பேசியபின், சர்க்கார் அதிகாரிகள் கதர் நிதிக்கு பணம் உதவக்கூடாது என்று செய்திருக்கும் தீர்மானத்தை கண்டித்த ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அக்கிராசனர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

---

உபசாரனைக் கமிட்டியாருக்கு நான் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். முதல் முதலில் ஜில்லா மகாநாட்டை மட்டும் நடத்தவேண்டும் என்று ஓர் எண்ணம் இருந்தது. ஆனால் அந்த எண்ணமானது மாறி இப்பொழுது விசேஷமகாநாட்டை நடத்தினார்கள். தொண்டர்களும் மற்றவர்களும் இந்த மகாநாட்டிற்காக அநேக உதவிகள் செய்திருக்கிறார்கள். எங்களுக்கு எந்த விதமான குறைவும் ஏற்படவில்லை. எனக்குத் தந்தி மூலமாக எனது கடமையை இங்கிருந்த நண்பர்கள் ஞாபகமூட்டி வந்தார்கள். எல்லா பிரதிநிதிகளும் திருப்தி அடைந்திருக்கிறார்கள். மற்றொரு முறை உங்களுக்கு வந்தனம் அளிக்கிறேன். நமது இயக்கம் வெற்றியடைக (கரகோஷம்)

மிகுந்த குதூகலத்துடன் மகாநாடானது ஜேய் சப்தங்களுடன் கலைந்தது.

## விதவா விவாகம்

### ஓர்விதவைக்குமாப்பிள்ளைவேண்டும்

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இவ்வுலகமே உண்மையாளர் கைவசமென்பதை எவருமறுப்பரோ. காயமுள்ளபோதே ஆயமுண்டு. ஆனதால் காற்றுள்ளபோதே தூற்றல் வேண்டும். காலம் சுருங்கச் சுருங்க ஆயுசும் சுருங்கும் என்ற நீதிவாக்கியங்களை நம் இந்துதேச பாரத புதல்வராகிய நாம் ஒவ்வொருவரும் மனதில்வைத்து நம் அன்னையாம் பாரததேவியின் சிறை மீட்சிக்காக உடல்பொருள் ஆவியைத்தத்தம் செய்ய தயாராகயிருக்கவேண்டும். பாரதமாதாவின் அம்சமாகிய நம் பால சகோதரிகளுக்கு அறியாப்பருவத்தில் மணம் முடித்து விதிவலியால் கணவனிறந்தால் அவர்களை விதவையென்று பெயரிட்டழைக்கவும், சுபகாரிய நிமித்தமாக புறப்படும் சமயம் அந்தோ எதிர் பாராவிதமாக நமது பரிதாப சகோதரிகள் எதிர்ப்படில் அபசகுனமென்று அவர்களை தூற்றுவதாலன்றோ அவர்களின் அம்சமாகிய நம் அம்மையாம் பாரததேவி மீளாத்துயரத்திலாழ்ந்து அடிமையுற்றிருக்கிறாளென்பதை எம சகோதரர்கள் ஊன்றி கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

காந்தி சமாஜத்திலிருந்து வெளியிட்ட 'விதவா விவாகம்' என்ற துண்டுப் பிரசுரத்தை அநேகமாய் எல்லா சகோதர சகோதரிகளும் கண்ணுற்றிருக்கலாமென்று நம்புகிறோம் அதன்படி எங்களுக்கு அநேக விண்ணப்பங்கள் வந்துகொண்டிருக்கின்றன. முக்கியமாக ஓர் விதவைக்கு மாப்பிள்ளைவேண்டும். பெற்றோர்களுக்கு ஷை விதவை ஒரே பெண்தான். பெற்றோர்களின் சுமார் பதினாயிர ரூபாய் மதிப்புள்ள தாவர சங்கம சொத்துக்களுக்கும் பிரஸ்தாப விதவா சகோதரியே உரியவர். சைவ வேளாள மரபைச்சார்ந்தவர். ஷை பெண்ணை மறு விவாகம் செய்துகொள்ளும் கனவான் சைவ வேளாளராகவும் நல்ல அந்தஸ்திலுள்ள குடும்பத்தில் ஜனித்தவராகவும் கல்வி கேள்விகளில் சிறந்தவராகவும் வாக்கு சாதுர்யமுள்ளவராகவுமிருத்தல் வேண்டும்.

புனர் விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்தால் போட்டோபடத்துடன் வயது, பெயர், தகப்பனார் பெயர், விலாசம் முதலானவைகளை விபரத்துடன் எங்கள் சமாஜத்திற்குமனுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

எஸ். சுடலை முத்துபிள்ளை,
காரியதரிசி.
காந்திசமாஜம்,
ஆரியங்காவு,
(செங்கோட்டை போஸ்டு).

காந்திசமாஜம்
1—7—1927

---

### பிராமணீயமொழித்த திருமணம்

திருப்புவனம்:-திருவிடமருதூர் திரு பால சுப்பிரமனிய பிள்ளையவர்களுக்கு 24-6-27 தேதியில் திருமணம் நடந்தேரியது.

இந்திய வாலிபர் சங்கத்திற்கு ரூ. 1-0-0 நன்கொடை அளிக்கப்பட்டதாக ஸ்ரீமான் முருகேசம்பிள்ளை எழுதுகிறார்.

## சென்னை மாகாண சித்தவைத்திய சங்கத்தின் சிறப்புக்கூட்டம் ஒன்று கூடியது.

உயர் திருவாளர்களான சாமி, விருதை சிவஞான யோகிகள், கும்பகோணம வைத்திய ஆசிரியர், க. வீ. கன்னைய நாயுடு, பழனி வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, கோவிற்பட்டி வைத்திய பூபதி பி. எம். சங்கரலிங்கம் பிள்ளை, கோவிற்பட்டி மு. அ. மாரியப்ப செட்டியார், கோவிற்பட்டி கே. சங்கரநாராயண முதலியார், சாத்தூர் நடுவிற்பட்டி ந. க. முத்துசாமி பிள்ளை முதலிய பல கனவான்கள் வந்திருந்தார்கள். யோகிகள் தலைமை பூண்டார்கள், பழனி வைத்திய ஆசிரியர் திரு ஆர். எம். கே. வேலுச்சாமிபிள்ளையவர்களால் அடியிற்கண்டதீர்மானம் கொண்டுவரப்பட்டது.

"சென்னையில் சுமார் இருபது வருடகாலமாய்த் தமிழுக்கும், தமிழ்ச் சித்தவைத்தியத்துக்கும், சைவசமயத்துக்கும், மிக உழைந்து வந்தவரும், சென்னை சமரச ஞான சங்கத்தலைவரும், சித்தர் நூற்பதிப்புக்கழக அமைச்சரும், சென்னைச் சித்த வைத்திய சங்க அமைச்சரும், சென்னை மாகாண சித்தவைத்திய சங்க அங்கத்தினரும், சித்தர் திருநாளை நாட்டியவரும், சென்னை யோகானந்தாச்சிரமத்திற்கு சொந்தக்காரரும் ஆகிய மறைத்திருவன், சண்முகானந்தசாமிகள் 27—6—1927-தேதி திங்கட்கிழமை இரவு 8-25 மணிக்கு சிவபதமடைந்தார்கள் என்பதை அறிந்து இச்சங்கம் மிகவும் வருந்துகின்றது,"

என்ற தீர்மானம் கும்பகோணம் வைத்திய ஆசிரியர் க. வீ. கன்னைய நாயுடு அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது என திரு வி. சிவஞான யோகி அறிவிக்கிறார்.

## பிராமணியத்தையும் கிரியையையும் நீக்கிய சடங்கு

செங்கல்பட்டு ஜில்லா சைதாப்பேட்டை தாலூகா அயனம் பாக்கம் கிராமம் பிரபல மிராஸ்தாரும் ஜஸ்டிஸ் இயக்கத்திற்கு அரும்பாடுபடும் அன்பர் திரு. எ. ரங்கநாத முதலியார் அவர்கள் சென்ற 30—6—27-தேதி வியாழக்கிழமை தினம் தமது தாயார் வருடாந்தர திதியினன்று ஆரிய சடங்கை ஒழித்து ஆதிதிராவிட மக்களுக்கு அறுசுவை அன்னமளித்து தாம்பூலம் வழங்கினர். இது மிகவும் போற்றற்பாலது.

## பார்ப்பனத் திருடன் பிடிபட்டான்

பல கொள்ளைகளில் சம்பந்தபட்டவரும் இதுகாறும் பிரபல போலீஸ்காரர்களால் பிடிக்கமுடியாதவரும், சமயத்துக்கு தக்கவாறு மாறுவேடம் பூண்பவரும், தில்லைஸ்தானத்தில் பிறந்தவரும், கண்டவர்களை நடுங்கச்செய்யும் சிங்கமும், சிதம்பரத்தில நடந்த கொள்ளையில் தலைவருமாயிருந்தவராகிய சிங்கமய்யங்காரை பிடிக்கவேண்டுமென்று பலவாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டு அனேக மாதங்களாகியும் பிடிபடாமலிருந்துகடைசியாக கந்தர்வகோட்டையில் சிங்கம் என்பவர் தன் உருவத்தையும் தன் குலத்தையும் பெயரையும் மாற்றிக்கொண்டும், சந்தனப்பொட்டு வைத்துக்கொண்டும், சிவன் கோவிலுக்கு குருக்களாக இருந்துவந்த சிங்கமய்யங்காரை இதுவரை இவரைபிடித்துதரவேண்டுமென்ற பெரு முயற்சிகொண்டகந்தர்வகோட்டை கள்ளர் ஸ்பெஷல் டிபார்ட்டுமெண்டிலிருந்தும் ஹெட் கான்ஸ்டேபிளாகிய தம்பி நாடார் என்பவர் இன்னார் என்று கண்டுபிடித்து தனது சப்இன்ஸ்பெக்டர் அவர்களிடம் தெரிவித்து அவருடையவும் மாஜி 'சந்திரராஜுலு நாயுடுவுடையவும் உதவிகொண்டு 17—6—27ல் மாலை 5-30 மணிக்கு பிடித்து, தஞ்சாவூர் சப் மாஜிஸ்டிரேட்டு முன்பாககொண்டுவரப்பட்டு, ஆலோசனைசெய்து சிதம்பரம் சப் மாஜிஸ்டிரேட்டிடம் அனுப்பப்பட்டு, விசாரணை நடந்துவருகிறது. இதுகாறும் யாராலும் பிடிபடாதிருந்த சிங்கத்தைப் பிடித்து உலகினருக்கு பயத்தை நீக்கிய தம்பி நாடாருக்கு நீண்ட ஆயுளும் உத்தியோக உயர்வும் மேன்மேலும் பெருக வேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

எழாயிரம்பண்ணை பால்ய நாடார் சங்கம் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா:—(17—7—27) ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அம்பிகை கோவில் முன்பு அமைத்திருக்கும் கொட்டகையின் கண் கூடும்படியாய்த் தீர்மானித்திருக்கிறது. அச்சமயம் சென்னை தமிழ் நாடு ஆசிரியர் தேசபக்தர் உயர் திரு. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமை வகிக்க மனமுவந்து சம்மதித்திருக்கிறார்கள். பல அறிஞர்களால் உபந்நியாசங்கள் நடைபெறும். ஆகையால் தாங்கள் தவறாது விஜயம செய்யும்படி விரும்புவதாக வெ. அ. மா. யா. மாரியப்ப நாடார் அறிவிக்கிறார்.

## பாபநாசத்தில் பார்ப்பனீய மறிந்தது. தலைவர் தேர்தல்.

தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூகா போர்டை பார்ப்பனீய அக்கிரகாரமாக்க பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சிகளையும், அவர்கள் வால்பிடித்துத்திரியும மந்திரிமார்கள் செய்த அநீத உத்தரவுகளையும், இதற்கு உத்தியோகப்பார்ப்பனர்கள் ஓடிவந்து அளித்த உடையுத்தரவு புரட்டுகளையும் தமிழ் நாட்டார் நன்குணர்வார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்கும் நமது நியாயக்கடவுளார் அசையாதிருந்து முடிவாக 30—4—27 தேதியன்று தாலூகா போர்டு தலைவர் தேர்தலை நடத்தினார்கள். 14 பார்ப்பனரல்லாதாரும் 2 பார்ப்பனர்களும் விஜயம் செய்திருந்தார்கள், உயர் திருவாளர்களான எ டி. பன்னீர் செல்வம், உமாமகேஸ்வரம் பிள்ளை, குமாரசாமி பிள்ளை முதலிய ஜில்லா பிரபலஸ்தர்களும் பொது ஜனங்கள் யாவரும் விஜயம் செய்திருந்தார்கள்.

### தேர்தல்.

திரு. ஆர். சி. நாகராச மூப்பனார் அவர்களால் திரு. எ. வீரையவாண்டையார் அவர்கள் தலைவராக இருக்கவேண்டுமென்று பிரேரேபனை செய்யப்பட்டு, திரு எஸ். கோவிந்தசாமி சிந்தூராயர் அவர்களால் அமோதிக்கப்பட்டு, உயர் திருவாளர் வாண்டையார் அவர்கள் ஏகமனதாக போர்டு பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பூமாரி பொழிந்தது. பார்ப்பனரிருவரும் இதைக்கண்டு திகைத்தும் வேறு கதியின்றி திரு. வாண்டையார் அவர்களை புகழ்ந்து கூறி சென்றார்கள். வெற்றியுள்ள வீரர் வாண்டையார் அவர்களையும அவர்தம் சகாக்களையும் வாழ்த்துவதோடு பார்ப்பனீய சூழ்ச்சியில் இருந்து வெளிவந்து வாகைமாலை யணிந்ததுக்கும் பாராட்டி நல்வரவேற்கின்றோம்.

பிராமணீயமொழித்த திருமணம்:—நாளது பிரபவ ஆண்டு ஆனித் திங்கள் 22ம் நாள் 6-7-27 புதவாரம் காலை திருக்கண்ணக்குடி திரு. எ. சதாசிவ முதலியாரவர்களின் தமையனார் குமாரன் சிரஞ்சீவி குஞ்சிதபாதத்திற்கும், தென் கோவனூர் திரு. எ. ஆர். ஸ்ரீனிவாச முதலியாரவர்கள் குமாரி திருச்செல்வி கோமளத்திற்கும் திருக்கண்ணக்குடியில் உற்றார் உறவினர் முன்பாக சிறப்பாக நடைபெற்றதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.


குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸுகளில் முதல்நர்தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்தமருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

## மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையிலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும், சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தணுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி —நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்து அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை


(3ம் பக்கம் தொடர்ச்சி)

வருவதையும் தடைப்படுத்துகிறார்கள். மற்றொருபக்கம் நீங்கள் எல்லாம் சூத்திரர்கள். அடிமைகளாகிய உங்கள் சுய தர்மத்தைச் செய்யுங்க"ளென்று வைதிகமோங்கி பிழைப்பு நடக்க வழியும் தேடுகிறார்கள். அக்கிரமம் தெரிந்து சிறிது யாராவது சொன்னால் உடனே எல்லாப் பார்ப்பாரப்பத்திரிகைகளும் பார்ப்பாரும் சேர்ந்து வகுப்புத்துவேஷிகள், பணக்கால் கூட்டத்தார், ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள், தேசத் துரோகிகள், அதிகாரவர்க்க ஆசாமிகள் என்று கூக்குரல் போடுகிறார்கள். அவர்களைச் சொல்வதில் என்ன பிரயோஜனம். நாம் அடிமைப்பட்டு பழகினபுத்தி நம்மைவிட்டுப் போகவில்லை. பின்னுமொருபக்கம் "நாமெல்லாம் ஒற்றுமையாயிருந்தாலல்லவா சுயராஜ்யம் வரும். வகுப்புத்துவேஷம் ஒழியும், சண்டையை நம் வீட்டில் போட்டுக்கொள்ளலாம். வெளியில் சண்டை போடலாமா? வெள்ளைக்காரனே நம்மைப் பிரிக்கிறான். ஜப்பான் எப்படி முன்னுக்கு வந்தது? சைனா இப்பொழுது என்ன செய்கிறது? அங்கோரா முன் என்ன செய்தது" என்பவைகளான சரித்திர ஆராய்ச்சியுடனும் பேசுகிறார். இவைகள் எல்லாம் பொன் முலாம் பூசிய பேச்சென்பது சரியே. ஆனால் உள்ளில் ரம்பப் பொடியிருக்கிறது என்று அறிந்தவன் எப்படி நம்புவான்? சமாதானத்துக்கு பிரசங்கம் செய்கிறவர்களே அக்கிரமங்களைச் செய்துவிட்டு அதன் லாபத்தையுமனுபவித்துக்கொண்டு சமாதானம் சொல்லுகிறார்கள். சாதாரணமாகக் கேட்கிறவர்களுக்கு நியாயமாகப்படுகிறது. நடக்கிற காரியங்களையும், நடாத காரியங்களையும் ஆலோசித்துப் பார்ப்பவர்கள்தான் பார்ப்பானைக் குற்றஞ் சொல்லுகிறார்கள். நம்மில் சில பணக்காரர்கள "பார்ப்பானை ஏன் குற்றஞ்சொல்லவேண்டும்? அவரால் என்ன முடியும்? உத்தியோகம் அவர்கள் பிழைப்பு? அவர்களைப்போல் நம்மவர்கள் வணக்க ஒடுக்கமாக வேலைசெய்வார்களா" என்று கேட்கிறார்கள். இவர்கள் பசிதெரியாதவர்கள். இவர்களுக்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமு மேற்படவில்லை. நம் மதசாஸ்திரப்படிப்போ, இங்கிலீஷ் ஆராய்ச்சிப் படிப்போ இவர்களுக்கு இல்லை. வகீல்களையும் பெரிய உத்தியோகஸ்தர்களையும் சிறிது அறிவார்கள். ஆபீஸ்களிலும், பள்ளிக்கூடங்களிலும் கோவில்களிலும் வெள்ளைக்காரர்களுடைய பங்களாவிலும் நடக்கும் சுய நலமும் அதனால் மற்ற சமூகங்களுக்கு ஏற்படும் கெடுதல்களும் இவர்களுக்குப் புலப்படுவதில்லை. பின்னும் நம்மில் இங்கிலீஷ் படித்து ராஜீய வாதிகள் என்று சொல்லுகிறவர்கள் 42 வருட காங்கிரசினால் ஒரு மனிதனுக்கு பொதுவான ரோட்டில் நடக்கும் உரிமைகூட இன்னமும் உண்டாகவில்லை. 144வது செக்ஷன் போட்டு தடுத்ததிலுள்ள அர்த்தமும் தெரியவில்லை.

தொடரும்


## "குமரன்"

### பார்ப்பனரல்லாதார்

### சமூக முன்னேற்றத்திற்கு உண்மையுடன் உழைப்பவன்

ஆதலின் இன்றே சந்தாதாரராய்ச்சேர்ந்து நாட்டின் விடுதலை வழி கடைப்பிடியுங்கள்.

ஆணித்தரமான அபிப்பிராயம்,
அச்சமற்றகண்டனம் ஏராளமான செய்தி
தேனென இனிக்கும் செந்தமிழ்நடை,
தேசிய தமிழ் வாரப்பத்திரிகைக்குள் தலைசிறந்தது,
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
ஏராளமான சந்தாதாரர்களை உடையது,
எனவே விளம்பரத்திற்குத் தகுந்த பத்திரிகை
'குமரன்' அன்றி வேறில்லை.
இன்றே மானேஜருக்கு எழுதி விபரம் அறியுங்கள்
மாதிரிப்பிரதி இனாம் !

மனேஜர்.
தனவைசியன் கம்பெனி லிமிடெட்
காரைக்குடி.

'குமரன்'

—

வழிபற்றி உண்மை நெறி காண்மின்!

—

வாரப்பதிப்பு
வருடச்சந்தா
உள்நாடு ரூ. 5
வெளிநாடு ரூ. 6

மாதப்பதிப்பு
வருடச்சந்தா.
உள்நாடு ரூ. 1-8-0
வெளிநாடு ,, 2-0-0

—

மானேஜர்.

நல்ல செடிகள். புதிய விதைகள்.

சேலம் ஒட்டு மாங்கன்றுகள் முதல் தாமானது. பல தினுசுகள் கலந்தது 100-க்கு 50 ரூபா கொய்யா 1 மாதுளை, டஜன் 6 ரூ. பொம்பளிமாஸ், ஆரஞ்சி, எலுமிச்சை டஜன் 9 ரூபா ரோஸ் குரோட்டன் டஜன் 9 ரூபா இங்கிலீஷ் காய்கறி விதைகள், புஷ்ப விதைகள் 20 சாம்பில் பாக்கெட் 2 ரூ மேற்படி 10 சாம்பில் பாக்கெட் 1-4-0 நாட்டுக் காய்கறி விதைகள் 20 பெரிய பாக்கெட்டுகள் 2-8-0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நாசரிதோட்டம் சேலம்.

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான் காலேர்த்தலைமுறையாய்க் கையாண்டு வந்த இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டு செய்து தரித்து கொண்டு சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அநேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பத்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அநுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது, பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.



# தாம்ப்ர பற்பம்.

தீரும் வியாதிகள் — கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், பொரி குஷ்டம், விரிகுஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குஷ்ட நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கோவை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், குலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் வெடிச்சல்கள், நிரேகம் அழுகி ஆறாத்த முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களை சீக்கிரத்தில் 5, 10, 21-வேளைகளில் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம் | முதல் தெ. தாம்பரபற்பம் அநுபான சூர்ணத்துடன் | 21-நாள் விலை ரூ. 30 | தபால் பிரத்தியேகம் |
| | ,, ,, ,, ,, | 10-நாள் விலை ரூ. 15 | |
| | 2-ம் தெ. ,, ,, ,, | 40-நாள் விலை ரூ. 40 | |

1. நற்சாட்சி:—பிறந்த பிரை [Prey] யிலிருந்து சி. வி. தோமஸ் என்பவர் மருந்து சாப்பிட்டு அநுபோகத்தைச் சொல்லுகிறதைக் கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பியமுதல் நம்பர்தாம்பிர பற்பத்தை நான் 5நாள் சாப்பிட்டேன் கருமேக நீர் சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப் படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு நான் உறுதியாய் நம்பிக் கொள்ளுகிறேன். 16-2-27. சி. வி. தோமஸ்,

என் பேருக்கு தாங்களனுப்பிய தாம்பிர பஸ்பமானது மிகவும் அருமையானதும் அற்புதமானதுமான வேலை செய்திருக்கிறது: எப்படி யெனில்:— ஓர் எளிய ஸ்திரீக்கு காலில் முழங்காலுக்குக் கீழ் துணைக்காயைப் போல் மேகவியாதி கால் பாதமிரண்டும் வீக்கம், இதற்காக நானும் சிலரும் சேர்ந்து பணம் வசூலித்து ஷை பஸ்பத்தின் வி. பி. யை வாங்குவதற்காக தயார் செய்து பார்சல் எங்களுக்குக் கிடைத்த அன்றைதினமே கொடுத்து இரண்டு தினம் நாலுவேளையில் காய்காயாக இருந்தது வற்றவும். பாதவீக்கமாக இருந்தது வடியவும், ஆரம்பித்து 5-நாள் 10-வேளை மருந்தில் முற்றிலும் உதிர்ந்து வீக்கமும் வாங்கி விட்டது. அநேகருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகி விட்டது.

6-2-25 (Sd) T. A. பிள்ளை, மூர்ரோட்டு பெங்களூர் டவுன்.

விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

## ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்,

சுதானந்த மெடிகல்ஹால், பழனி மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

நமது சோல் ஏஜண்டு { M. E. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் 86 டெலுக்கொடாங் ரோட்டு. கிளாங்—Klang F. M. S



## மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று,

மு. வடிவேல் செட்டி,
110, கல்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.



"அதிவேகு ஆச்சரியம்" என்னும்

## ஆருடம்,

கைகண்ட பலன்! தகுந்த விடைகள். தகுந்த விடைகள்! எதிர் கால பலன் கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று. மேற் கொண்டு கேள்வி 1-க்கு அணு நான்கு. தபால் செலவு வேறு. இன்னும் வேறுவிஷயங்களுக்கும் கமக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி. எஸ். அய்யர்
சுப்ரமணிய வாசி பழனி P. O. (S. I.)



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents
ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிருமம சமாஜம், ஜி. டி. மதராஸ்



## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி



உங்களுக்கு ஓர் நற் சகுனம்

## ஜோதிடம்

தர்ம நியாயமான 6 கேள்விகளுக்கு ரூபாய் ஒன்று பிரதி ஒவ்வொரு கேள்விகளுக்கு 0-4-0 ஒரு வருஷத்திற்கு பலன் ரூ 5-0-0 ஆயுள் வரை பலன் ரூ. 50.

ஸ்ரீசிவ சுப்ரமண்ய சர்வ ஜயவசிகரணி கவசம் கைமேல் பலன். இராஜாக்களின் அபிமானம் புருஷனிடம் அன்பில்லாத மனைவி, மனைவியிடம் அன்பில்லாத புருஷவசியம் குடும்பங்களில் ஏற்படும் கலகங்களின் நிவர்த்தி பக்தி விசுவாசம் இக்கவசம் மிக்க கியாதி பெற்றது பயம் பிசாசு சரித்திரம் முதலிய அணுகா.

வெள்ளி கவசம் ரூ. 2-8-0 சாதா கவசம் ரூ. 1. தபால் வேறு.

மானேஜர்,
ஸ்ரீசிவ சுப்பிரமணிய சோதிட கவச நிலயம்
திருத்தணி சித்தூர் ஜில்லா



இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனாமாய் அனுப்பபடும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷ உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



1000 கணக்கான வியாபாரிகள்.மாணவர்கள், குமஸ்தாக்கள் திருப்தியடைந்த உலகப்பிரசித்தி பெற்ற

## 5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

சொற்ப ஆங்கிலம் தெரியாமல் தொழிலில் பெருத்த நஷ்டமடையாதீர்கள் தபால் மூலம் வெகு சுலபமாய் தொழிலுக்கு யாதொரு இடையூறன்றி 1 மாத முதல் 5 மாதத்திற்குள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. நாகை ரேஞ்சு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்:— இங்கிலீஷ் அட்சரங்கள் கூட தெரியாதிருந்தவர்கள் இரண்டு வருஷத்தில் காலேஜ் மாணவர்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் உபந்நியாசிக்க கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தனர். சொற்ப கோர்ஸ்கள் தான் ஸ்டாக்கில் இருக்கின்றன. தங்கள் விலாசத்தை உடனே அனுப்பி பிராஸ்பெக்டஸை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

பிரின்சிபல் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டியூட் நாகூர்

# சேலம்
## சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக விசேஷமாய்

### பட்டு ஜரிகை பேட்டுகளினால் தயார்செய்த கதர்

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட கைஸ் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி தகங்களும் 45 x 5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில தகங்களும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

ஸ்ரீமான் C V ஜெயகோபாலசெட்டியார் கை நூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,
கதர் வியாபாரம், சேலம்.



### பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான் யாவும் விலை மலிவாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

## திருப்பூர்
## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை நீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூரா தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

### மகா ரசகெந்திமெழுகு.

கிராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.


ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I.

### மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, தாதுஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த குளிகை சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம்,. திருச்செங்கோடு (S I.)

### டிடக்டாவை அல்லது
### துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்து கொள்ளலாம். மேலுட்டார் கண்டு பிடிக்க கருவி இது பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு சுன்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்".

பாரிஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்

## மூன்று மாதத்தில்
## மோட்டார் ஓட்ட கற்றுக்
## கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## கதர்ப் பத்திரிகைக்கு

### வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
### 8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி. நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

இனாம்! இனாம்!! இனாம்!!!

## பெண்களுக்கு


அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு. ஸ்கப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்ற முள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ 4—8—0
2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ,... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ. 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



. மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் சட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டுமே.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.